REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2023 ஓகஸ்ட் 30 புதன்கிழமை

# தினகரன்

THINAKARAN

තිනකරන්

வரு. 91 இல. 205 | Wednesday 30, August, 2023 | 12 பக்கங்கள் | 50/-


ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் தொடர்பான

## CID விசாரணை 99 வீதம் நிறைவடைந்துள்ளது

அமைச்சர் டிரான் அலஸ் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்




உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பான குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களத்தின் 04

செப்டெம்பர் 05 முதல் 08 ஆம் திகதி வரை

## வெளிநாட்டு பயணங்களை முடிந்தளவு தவிர்க்கவும்

ஆளும் தரப்பு எம்.பிக்களுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தல்

(லோரன்ஸ் செல்வநாயகம்)



எதிர்வரும் வாரத்தில் பாராளுமன்ற தினங்களான 5, 6, 7 மற்றும் 8 ஆம் திகதிகளில் வெளிநாடுகளுக்கு செல்வதை தவிர்த்துக் கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சர்கள் மற்றும் 04

## திருத்தங்களை உள்வாங்கி பயங்கரவாத எதிர்ப்பு சட்டம்

மீண்டும் தயாரிக்க அமைச்சரவை அனுமதி

(லோரன்ஸ் செல்வநாயகம்)



திருத்தங்களை உள்வாங்கி பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை மீண்டும் தயாரிப்பதற்காக சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை 04

வெளிநாட்டு பிரஜைகளை கவர்ந்திழுக்க

## வீசா முறைகளை இலகுவாக்க அரசாங்கம் புதிய திட்டம்

அமைச்சரவையும் அங்கீகாரமளிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)



சமகாலத்தில் நிலவுகின்ற வீசா முறைகளை மிகவும் இலகுபடுத்துவதற்காக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. 04

03 மாதங்களில் 92.1 மில். தொகை;

## இந்தியாவிலிருந்து முட்டை இறக்குமதி தொடரும்

அமைச்சரவை அனுமதி



(லோரன்ஸ் செல்வநாயகம்)

எதிர்வரும் மூன்று மாதங்களுக்காக இந்தியாவிலிருந்து 92.1 மில்லியன் முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன், அமைச்சரவை அதற்கு அனுமதி வழங்கியுள்ளது. அமைச்சரவையில் நிதி, பொருளாதார மேம்பாடு மற்றும் 04

# மூத்த பிரஜைகளின் தடுப்பு வரியை மீள வழங்க அரசு முடிவு

- செப். 10ஆம் திகதிக்குப் பின்னர் 5 வீத தடுப்பு வரியை வழங்க தீர்மானம்
- ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய நடவடிக்கை எடுத்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவிப்பு



(லோரன்ஸ் செல்வநாயகம்)

மாதாந்தம் ஒரு இலட்சம் ரூபாவுக்கும் குறைவான வட்டி வருமானத்தை பெற்றுக்கொள்ளும் மூத்த பிரஜைகளுக்கான வட்டி மற்றும் வரி வருமானமாக அறவிடப்படும் நூற்றுக்கு 5 வீத தடுத்து வைப்பு வரியை செப்டெம்பர் 10ஆம் திகதிக்குப் பின்னர் மீள வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சிரேஷ்ட பிரஜைகளின் தடுத்து வைப்பு வரி அறவீடு தொடர்பில் நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ள நிலையில் அவரது பணிப்புரைக்கிணங்க இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

தேசிய வருமான வரி திணைக்களத்தின் மதிப்பீட்டு அதிகாரிகள் சங்கத்தின் 10ஆவது வருடாந்த நிகழ்வு நேற்று கொழும்பு கிங்ஸ்பரி ஹோட்டலில் நடைபெற்றதுடன் அந்த நிகழ்வில் பிரதம அதிதியாக 04

## ரூபவாஹினி, கைத்தொழில்சபை மூலம் கைத்தொழிலாளர்களை முன்னேற்ற திட்டம்

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து



படம் : கயான் புஷ்பிக

(லோரன்ஸ்செல்வநாயகம்)

தேசிய ரூபவாஹினி இந்த நாட்டின் உற்பத்தி பொருளாதாரத்தில் ஒன்றிணைந்த நிறுவனமாக செயற்படுவதாக போக்குவரத்து ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். உற்பத்திப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மற்றும் வீழ்ச்சியின் போதும் முன்னுதாரணமாக நாட்டு மக்களுடன் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கு 04

## இலங்கையில் கடற்றொழில் துறையில் முதலீடு செய்ய தென்கொரியா ஆர்வம்




இலங்கையில் கடற்றொழில் துறையில் முதலீடு செய்ய தென் கொரியா ஆர்வமாகவுள்ளது. அந்நாட்டின் முன்னணி வர்த்தகர்களில் ஒருவரான கங் இது தொடர்பாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். கடற்றொழில் அமைச்சில் நேற்று 04

எதிர்வரும் வரவு செலவு திட்டத்திற்கு முன்னதாக

## சமுர்த்தி அதிகாரிகளின் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு



எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்திற்கு முன்னர் சமுர்த்தி உத்தியோகத்தர்களின் நிர்வாக பிரச்சினைகளை தீர்க்குமாறு பிரதமர் தினேஷ் குணவர்தன அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். சமுர்த்தி உத்தியோகத்தர்களின் தீர்க்கப்படாத பிரச்சினைகள் தொடர்பில் அலரிமாளிகையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே பிரதமர் தினேஷ் குணவர்தன இந்த பணிப்புரைகளை வழங்கியுள்ளார். சமுர்த்தி திணைக்களத்திற்கு உள்வாங்கப்படும் போது 44உ(11) பிரிவின் 04

## 'அஸ்வெசும' விபரங்களை '1924' க்கு அழைத்து பெறவும்



02 மில்லியன் பயனாளிகளில், 1.5 மில்லியன் பயனாளிகளுக்கான கொடுப்பனவுகள் வழங்கும் பணிகள் கட்டம் கட்டமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார். ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், முதற்கட்டமாக 689,803 பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் 4.395 பில்லியன் ரூபாய் வைப்பிலிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். 04

அரசின் நலன்புரித்திட்டம் குறித்து;

## தவறான தகவல்களை வழங்கினால் சட்டநடவடிக்கை



அரசின் நலன்புரித்திட்டம் குறித்து தவறான தகவல்களை வழங்கி நலன்புரி கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதோடு இதுவரை முறைகேடான வகையில் பெற்றுக்கொண்ட நலன்புரி கொடுப்பனவுகள் அனைத்தும் மீள அறவிடப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் 04

"எக்ஸ்பிரஸ் பேர்ள்" கப்பல் விபத்து;

## இடைக்கால கொடுப்பனவுக்கு இலங்கை அரசு இணக்கம்



'XPress Pearl' கப்பல் விபத்திற்கான இடைக்கால கொடுப்பனவிற்கு இலங்கை அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தேவையான அறிவிப்புகள் கப்பலின் காப்புறுதி நிறுவனம் மற்றும் சட்டத்தரணி நிறுவனத்திற்கு எழுத்து மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக 04



03

### அடுத்த ஜனாதிபதி தேர்தலில் அநுர

தே.ம.ச நிறைவேற்றுக்குழு தீர்மானம்



03

### இந்திய பாதுகாப்பு அமைச்சர் இலங்கை வருகிறார்



03

வரட்சியான வெப்பநிலை அதிகம்;

### குழந்தைகள் மீது அதிக கவனம் செலுத்த கோரிக்கை

"அஸ்வெசும" கொடுப்பனவுகளுக்காக

## அரச வங்கிகள் இன்று திறந்திருக்கும்



'அஸ்வெசும' நலன்புரி கொடுப்பனவுகளை வழங்குவதற்காக மாத்திரம் இன்றைய தினம் அரச வங்கிகள் திறந்திருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று பௌர்ணமி தினத்தை முன்னிட்டு அரச வங்கிகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ள நிலையில் நலன்புரி கொடுப்பனவுக்காக வங்கிகள் இவ்வாறு திறக்கப்படவுள்ளதாக இராஜாங்க 04

## சுற்றுலா பயணிகள் வருகை அதிகரிப்பு

விரைவில் 09 இலட்சத்தை கடக்கும்



இந்த வருடம் நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை விரைவில் 9 இலட்சத்தை தாண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மாதத்தின் முதல் 27 நாட்களில் மாத்திரம் 8 இலட்சத்து 91 ஆயிரத்து 188 பேர் நாட்டிற்கு வருகைத்தந்துள்ளதாக சுற்றுலா 04

சிறைத்தண்டனை இடைநிறுத்தம்;

## இம்ரான் கானுக்கு பிணை வழங்க தீர்மானம்

இரு நீதிபதிகள் குழாம் முடிவு



பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் மீதான ஊழல் குற்றச்சாட்டை அடுத்து அவருக்கு விதிக்கப்பட்ட தண்டனையை இஸ்லாமாபாத் மேல் நீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் கொண்ட குழாம் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது. அத்துடன் அவருக்கு பிணை வழங்குவதற்கும் நீதிபதிகள் குழாம் தீர்மானித்துள்ளதாக 04

## பிறப்புச் சான்றிதழ் இல்லாதோருக்கும் அடையாள அட்டை



பிறப்புச் சான்றிதழ் இல்லாத காரணத்தால் தேசிய அடையாள அட்டையைப் பெற முடியாத 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தேசிய அடையாள அட்டை வழங்கும் வேலைத்திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். இது தொடர்பான சுற்றறிக்கை அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் 04




### தடைசெய்யப்பட்ட பொலித்தீன் பைகள்;

# நல்லூரில் கடை உரிமையாளர்கள் 35 பேருக்கு அதிகாரிகள் எச்சரிக்கை

**யாழ். விசேட நிருபர்**

நல்லூர் ஆலயச் சூழலில் அமைக்கப்பட்டுள்ள கடைகளில் தடை செய்யப்பட்ட பொலித்தீன் பைகளை வைத்திருந்த 35 கடை உரிமையாளர்களுக்கு யாழ். மாவட்ட மத்திய சுற்றாடல் அதிகாரசபையினர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (28) கடுமையாக எச்சரித்துள்ளதுடன், அப்பொலித்தீன் பைகளை அகற்றவும் பணித்துள்ளனர்.

20 மைக்ரோன் தடுப்புக்கு குறைந்த பொலித்தீன் பாவனை தடை செய்யப்பட்டுள்ளதுடன், லஞ்சீற்றுகள் 100 சதவீதம் உக்கும் தன்மையுடையதாக இருக்க வேண்டும். இந்த நிபந்தனையை மீறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென, யாழ். மாவட்ட மத்திய சுற்றாடல் அதிகாரசபையினர் தெரிவித்தனர்.

தற்போது நல்லூர் திருவிழா நடைபெறுவதால் ஆலயச் சூழலில் கச்சான், இனிப்பு, காரம் சுண்டல் கடைகள் பெருமளவாக அமைக்கப்பட்டுள்ளதுடன், இந்தக் கடைகளில் தடை செய்யப்பட்ட பொலித்தீன் பாவனை அதிகளவாக காணப்பட்டமை கவனத்தில் கொள்ளப்பட்டது. இது தொடர்பாக கடை உரிமையாளர்களுக்கு எச்சரித்துள்ளதாகவும் இதை மீறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், யாழ். மாவட்ட மத்திய சுற்றாடல் அதிகாரசபையினர் தெரிவித்தனர். இதேவேளை, ஆலயத்துக்கு பூக்கள், அர்ச்சனை பொருட்களை கொண்டுவரும் பக்தர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி, மாற்றீடாக துணிப்பை வழங்கும் நடவடிக்கை நல்லூரில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த விழிப்புணர்வை மாணவர்கள், ஆசிரியர்கள், மத்திய சுற்றாடல் அதிகாரசபையினர் முன்னெடுத்துள்ளனர்.

மேலும், யாழ்ப்பாணத்தில் கடந்த 8 மாத காலத்தில் தடை செய்யப்பட்ட பொலித்தீன்களை வைத்திருந்த 14 கடை உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும், யாழ். மாவட்ட மத்திய சுற்றாடல் அதிகாரசபையினர் மேலும் தெரிவித்தனர்.

## யாழ். பல்கலை மாணவன் கத்தியுடன் கைது!

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தில் கல்வி கற்கும் பெரும்பான்மையின மாணவன் ஒருவனை கத்தி வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (28) இரவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வர்த்தக நிலையமொன்றுக்கு கத்தியுடன் சென்ற இம்மாணவன், பணியாளர்களை அச்சுறுத்தும் வகையில் நடந்துகொண்டதாக பொலிஸாருக்கு வர்த்தக நிலைய உரிமையாளர் தகவல் வழங்கியதையடுத்து, சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், அம்மாணவனை கைது செய்துள்ளனர்.

இம்மாணவனை கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.

### வடக்கின் உதயம்

## பாசிப்பயறு அறுவடையை பார்வையிட்ட இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான்



**மன்னார் குறூப் நிருபர்**

மன்னார், வட்டுப்பித்தான் மடு பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட பாசிப்பயறு அறுவடையை கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் அண்மையில் பார்வையிட்டார்.

விவசாயச் செய்கை மூலம் சிறந்த பொருளாதாரக் கொள்கையை உருவாக்கி, மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் விவசாய அமைச்சினதும், மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியத்தினதும் உதவியிலும் விவசாயிகளின் பங்களிப்பிலும் மன்னாரில் சுமார் 1,600 ஹெக்டேயரில் பாசிப்பயறு செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்த அறுவடையால் 900 மெற்றிக்தொன் பயறு கிடைத்துள்ளதுடன், ஒரு கிலோகிராம் பயறு 825 ரூபா முதல் 850 ரூபாவரை விற்பனை செய்யப்படவுள்ளது. பாசிப்பயறு செய்கையின் மூலம் பெண்கள் நாளாந்தம் சுமார் 5,000 ரூபா வருமானத்தை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக, மன்னார் மாவட்ட விவசாயப் பணிப்பாளர் சகிலா பானு தெரிவித்தார்.

## தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத் தீர்த்தோற்சவம்

**கரவெட்டி தினகரன் நிருபர்**



யாழ். தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தினுடைய வருடாந்த மகோற்சவத் திருவிழாவின் தீர்த்தத் திருவிழா நேற்று செவ்வாய்க்கிழமை (29) மிகச் சிறப்பாக நடைபெற்றது.

காலை 6.00 மணிக்கு கொடித்தம்ப பூஜை நடைபெற்றதை தொடர்ந்து 7.30 மணிக்கு வசந்த மண்டப பூஜை நடைபெற்றது. இதன் பின்னர் விநாயகப்பெருமான், முருகப்பெருமான், சண்டேஸ்வரி சமேதராக துர்க்காதேவியானவர் புஷ்கரணி தீர்த்தக் கேணியில் தீர்த்தமாடினார். தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா, நேற்றையதினம் கொடியிறக்கத்துடன் நிறைவடைந்தது.

## இயக்கச்சியில் இராவணன்வனம் தாவரவியல் பூங்கா திறப்புவிழா

**யாழ்ப்பாணம் குறூப் நிருபர்**



இயக்கச்சி பிரதேசத்தில் இராவணன்வனம் தாவரவியல் பூங்கா திறப்பு விழா கடந்த சனிக்கிழமை (26) இடம்பெற்றது.

இலங்கையை ஆண்ட இராவண மன்னனின் பெயரில் இந்தப் பூங்கா திறந்து வைக்கப்பட்டது.

இதன்போது, விவசாயி பொன்னுத்துரையின் உருவச்சிலையும் திரைநீக்கம் செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பொன். பாலசுந்தரம்பிள்ளை, சிவகாம சேகரர் கிரியாஜோதி கர்வசாதக ரத்னம் பிரம்மஸ்ரீ வித்தியானந்தக் குருக்கள், அருட்தந்தை ஜீவேந்திரா, இராணுவ மற்றும் பொலிஸ் உயரதிகாரிகளென பலர் கலந்துகொண்டனர்.

## முகமூடி அணிந்த கொள்ளை கும்பலை சேர்ந்த நால்வர் யாழ்ப்பாணத்தில் கைது

**யாழ். விசேட நிருபர்**



யாழ்ப்பாணத்தில் முகமூடி அணிந்த கொள்ளைக் கும்பலைச் சேர்ந்த 4 சந்தேகநபர்களை நேற்று முன்தினம் திங்கட்கிழமை (28) கைது செய்த பொலிஸார், இச்சந்தேகநபர்களிடமிருந்து 28 பவுண் தங்கநகைகள், 4 கையடக்கத் தொலைபேசிகள், ஒரு வாள், ஒரு மோட்டார் சைக்கிள் ஆகியவற்றையும் கைப்பற்றியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் கடந்த வாரம் 4 தினங்களாக தொடர்ந்து இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் விசாரணை நடத்தி, நல்லூரைச் சேர்ந்த இச்சந்தேகநபர்களை கைது செய்துள்ளனர்.

இச்சந்தேகநபர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் போது, நல்லூர் பிரதேசத்தில் தனியாகச் செல்லும் முதியவர்களை இலக்கு வைத்து அவர்களை மிரட்டி கையடக்கத் தொலைபேசி, பணம் ஆகியவற்றை வழிப்பறி செய்தமை தெரியவந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சந்தேக நபர்களிடம் பொலிஸார் தொடர்ந்து விரிவான விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.

## இலங்கை மனித உரிமை ஆணைக்குழு நுவரெலியா மாவட்ட காரியாலயத்தை இடமாற்ற வேண்டாம்

### பொது அமைப்புகள் கோரிக்கை

**(தலவாக்கலை குறூப் நிருபர்)**

நுவரெலியாவில் நீண்டகாலமாக இயங்கி வரும் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் நுவரெலியா மாவட்ட காரியாலயத்தை இடமாற்ற வேண்டாம் என கோரி பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

தற்பொழுது நுவரெலியாவில் இயங்கிவரும் இலங்கை மனித உரிமை ஆணைக்குழு கிளை காரியாலயத்தை ஹற்றன் நகருக்கு மாற்றுவதற்கு இலங்கை மனித உரிமை ஆணைக்குழு நடவடிக்கை எடுத்து வருகின்றது. எனினும் நுவரெலியா மாவட்ட காரியாலயத்தை இடமாற்ற வேண்டாம் என நுவரெலியாவில் இயங்கிவரும் 13 பொது அமைப்புகள், பிரதிநிதிகள்

நுவரெலியா, மஸ்கெலியா, கொத்மலை, வலப்பனை மற்றும் ஹங்குராங்கெத்த ஆகிய தொகுதிகளில் வாழும் மக்களுக்கு ஒரு மத்திய இடமாக நுவரெலியா காரியாலயம் இயங்கிவருகின்றது. இதனால் நுவரெலியா மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச மக்களும் தங்களது தேவைகளை இலகுவான முறையில் பூர்த்தி செய்து கொண்டு வந்துள்ளனர். எனவே நுவரெலியா காரியாலயத்தை ஹற்றன் நகருக்கு மாற்றினால் வலப்பனை, ஹங்குராங்கெத்த பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் பெரும் அசௌகரியங்களை அனுபவிப்பார்கள்.

நுவரெலியாவுக்கு வருகை தந்து அங்கிருந்து ஹற்றன் சென்று மீண்டும் வலப்பனை, ஹங்குராங்கெத்த போன்ற பிரதேசங்களுக்கு திரும்பி செல்வது பயணசெலவை அதிகரிப்பதுடன் பெரும் சிரமத்தையும் ஏற்படுத்தும். எனவே இந்த காரியாலயத்தை நுவரெலியாவிலேயே இயங்க செய்யும்படி நுவரெலியாவில் இயங்கும் 13 சமூக அமைப்புகளின் முக்கிய பிரதிநிதிகள் கையொப்பமிட்டு கோரிக்கை கடிதங்களை இலங்கை மனித உரிமை ஆணைக்குழு தலைவர் எல்.டி.பீ. தெய்தெனியவுக்கும் ஆணையாளர்களான நிமலசேன கார்த்திய புஞ்சிஹேவா, நய்யமுத்து தனராஜ், விரிவுரையாளர் பாத்திமா பர்ஸானா ஹனிபா, விரிவுரையாளர் கெயான் தினுக் குணதிலக்க ஆகியோருக்கு கோரிக்கை கடிதங்களை அனுப்பிவைத்துள்ளனர்.

## தம்புளு தேசிய பாடசாலைக்கு உத்தியோகபூர்வ பத்திரிகை



பாடசாலைகளுக்கான உத்தியோகபூர்வ பத்திரிகை திட்டத்தின் கீழ் அசோசியேட்ட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடெட் (லேக் ஹவுஸ்) நிறுவனம் ரங்கிரி தம்புளு தேசிய பாடசாலையுடன் இணைந்து 'விது பியச' என்ற பெயரில் இணைப்பு பத்திரிகை மற்றும் மின்னிதழ் (இ பேப்பர்) என்பவற்றை நேற்று (29)வெளியிட்டு வைத்துள்ளது. லேக்ஹவுஸ் நிறுவன நிதிப் பணிப்பாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன, பாடசாலை அதிபர் டப்ளியூ.எம்.ஜே.பி விஜேசிங்க ஆகியோர் தலைமையில் பாடசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் லேக்ஹவுஸ் நிறுவன அரச தொடர்புகள் பிரிவின் முகாமைத்துவ ஆசிரியர் சமந்த கருணாசேகர, உதவி அதிபர் மல்வான விமலானந்த தேரர் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டிருப்பதை படத்தில் காணலாம். (படம் வாசித பட்டபெந்திகே)

### மலைச்சாரல்

## சமனலவெவ நீர்த்தேக்கத்தில் நீராடுவதை தவிர்க்கவும்

### பொலிஸார் அறிவுறுத்தல்

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

பலாங்கொடை சமனலவெவ நீர்த்தேக்கத்தில் நீராடுவது முற்றாக தடைவிதிக்கப்பட்டுள்ளதாக சமனலவெவ பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

சமனலவெவ நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் தற்போது குறைவடைந்துள்ளது. இதனால் நீர்க்கசிவைத் திருத்தும் பணிகள் நடைபெற்றுவருவதால் இவ்வறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. எனவே இதன் கீழ் உள்ள நீர்நிலைகளில் நீராடுவதை தவிர்த்துகொள்ளுமாறு பொதுமக்களிடம் பொலிஸார் வேண்டுகோள் விடுகின்றனர். நீர் வற்றியுள்ள சிறிய நீர்நிலைகளில் உள்நாட்டு சுற்றாடல் பயணிகள் நீராடுவதுடன் நடமாடுவதையும் தமது பொழுதுபோக்குகளாக கொண்டுள்ளனர். இது ஒரு ஆபத்தான நிலையாகும் ஏனெனில் சமனலவெவ நீர்த்தேக்கத்தில் நீர்க்கசிவை திருத்தும் போது தேங்கியுள்ள நீர் பள்ளத்தாக்கை நோக்கி பாயும் ஆபத்தான நிலை இருப்பதால் இவ்விடங்களில் நடமாடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறு பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# எட்டியாந்தோட்டை மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு

**(காவத்தை தினகரன் விசேட நிருபர்)**

எட்டியாந்தோட்டை தேர்தல் தொகுதியைச் சேர்ந்த மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு வழங்கப்படுமென சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திசாநாயக்க தெரிவித்தார்.

எட்டியாந்தோட்டை தேர்தல் தொகுதியில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

எட்டியாந்தோட்டை தேர்தல் தொகுதி மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திசாநாயக்க நேரடியாக விஜயம் செய்து பிரச்சினைகளை கேட்டறிந்தார். அதனை தொடர்ந்து கருத்து தெரிவிக்கையிலேயே ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்.

சப்ரகமுவ மாகாண ஆளுநர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

தற்போது பழுதடைந்து காணப்படும் 101 வருடம் பழமைவாய்ந்த எட்டியாந்தோட்டை கராகொட பாலத்தை முழுமையாக புனரமைக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இருந்து 500 மில்லியன் ரூபா நிதி பெறப்பட்டுள்ளது. பாலத்தின் அபிவிருத்திப் பணிகளை அடுத்த மாதம் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் கித்துல்கல கிராம வீதியை அபிவிருத்தி செய்வதற்கு 15 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் அபிவிருத்திப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திசாநாயக்க மேலும் தெரிவித்தார்.

மேலும் எட்டியாந்தோட்டை பிரதச சபை, எட்டியாந்தோட்டை அல்கொல்ல பிரதேச வைத்தியசாலை, எட்டியாந்தோட்டை அமனாவல பிரதேச வைத்தியசாலை, கித்துகல தெலிகம வைத்தியசாலை, எட்டியாந்தோட்டை இங்கிரியவத்தை மகா வித்தியாலயம் என்பவற்றுக்கு சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திசாநாயக்க நேரடியாக விஜயம் செய்து அங்கு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் பாடசாலைகளின் குறைபாடுகளையும் கேட்டறிந்தார். இதன்போது நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்ஜித் சியம்பலாபிட்டிய, பாராளுமன்ற உறுப்பினர் ராஜிகா விக்கிரமசிங்க உட்பட முக்கிய அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# நோர்வூட்டில் பாடசாலை முன்பாக பெற்றோர் ஆர்ப்பாட்டம்

**(மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்)**

நோர்வூட் பகுதியிலுள்ள பாடசாலையொன்றில் நேற்று பெற்றோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இரண்டாம் தவணை கற்றல் நடவடிக்கைகளுக்காக நேற்று பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட போதே பாடசாலை முன்பாக பெற்றோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்பாடசாலையிலுள்ள அனைத்து ஆசிரியர்களையும் இடமாற்றம் செய்யுமாறு கோரி கடிதமொன்றை பெற்றோர் பாடசாலை அதிபரிடம் கையளித்துள்ளனர்.

பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியரொருவர் 8 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தியதாக குற்றம்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார். ஹற்றன் நீதவான் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில், எதிர்வரும் 4ஆம்திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். தரம் 05 மாணவர்களுக்கு கடந்த 22ஆம் திகதி மேலதிக வகுப்புகளை நடாத்திக் கொண்டிருந்த போது ஆசிரியர், நோர்வூட் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

8 வயது மாணவி சுகவீனம் காரணமாக பெற்றோரால் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

வைத்தியசாலையில் அனுமதித்த சிறுமியை பரிசோதனைக்குட்படுத்திய வைத்தியர்கள் சிறுமி பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தப்பட்டுள்ளதாக சந்தேகித்தமையால் நோர்வூட் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தனர்.

அதற்கமைய பொலிஸார் மேற்கொண்டவிசாரணைகளின்அடிப்படையில் ஆசிரியர் கைதுசெய்யப்பட்டார்.

இதேவேளை, அதே பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியரொருவர் சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வுக்காக 13 வயதுடைய மாணவன் ஒருவனை அழைத்துச் சென்ற வேளை மாணவன் காணாமல் போயுள்ளதாகவும் நோர்வூட் பொலிஸ் நிலையத்தில் சிறுவனின் பெற்றோர் முறைப்பாடு ஒன்றையும் பதிவு செய்திருந்தனர்.

இதனையடுத்து அந்த ஆசிரியர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு கடந்த 23ஆம் திகதி ஹற்றன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இது போன்ற சம்பவங்கள் இனிமேலும் இடம்பெறாமலிருக்க கல்வி அமைச்சர் மற்றும் கல்வி இராஜாங்க அமைச்சர் கல்வி அதிகாரிகள் ஆகியோர் இணைந்து ஆசிரியர்களுக்கான ஒழுக்காற்று நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு வலியுறுத்திய பெற்றோர், சகல ஆசிரியர்களுக்கும் இடமாற்றம் வழங்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## இந்தோனேசியாவில் நேற்று நிலநடுக்கம்



இந்தோனேசியாவின் பாலி கடல் பகுதியில் நேற்று (29) 7.0 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக ஐரோப்பியமத்திய தரைக்கடல் நில அதிர்வு மையம் (EMSC) தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கத்தின் மையம் இந்தோனேசியாவின் மாதரத்திற்கு வடக்கே 203 கிலோமீற்றர் (126 மைல்) தொலைவிலும், பூமியின் மேற்பரப்பிற்கு

04

### 2024–2025 ற்கான எல்.பி.கேஸ் விநியோக ஒப்பந்தம்;

# ஜனாதிபதியின் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அடுத்த வருடத்திற்கான எல்.பி.கேஸ் விநியோக ஒப்பந்தத்தின் போது மொத்த விநியோகத்தில் 50 வீதத்தை தற்போதைய விநியோகஸ்தர்களுக்கு வழங்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

லிட்றோ கேஸ் நிறுவனத்துக்கு 2 இலட்சத்து 80 ஆயிரம் மெட்ரிக் தொன் எல்.பி.கேஸ் விநியோகத்துக்கான ஒப்பந்த காலம் இந்த வருடத்தின் டிசம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் நிறைவு பெறவுள்ளது. அந்த வகையில் 2024 – 2025 காலத்திற்கு எல்.பி.கேஸ் விநியோகம் தொடர்பில் தற்போது டென்டர் கோரப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் லிட்றோ கேஸ் நிறுவனத்தை மறுசீரமைக்கும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் புதிய ஒப்பந்தங்களுக்கு அந்த நிறுவனத்தை இணைத்துக் கொள்வது அதன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்பட இடமுண்டு என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அந்தவகையில், மறுசீரமைப்பு நடவடிக்கைகள் நிறைவு பெறும்வரை எந்தவித தடைகளும் இன்றி எல்.பி.கேஸ் விநியோகத்தை மேற்கொள்வதற்காக ஜனாதிபதியினால் மேற்படி யோசனை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்தப் பத்திரத்திற்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# நெதர்லாந்து – இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்து

**அஷ்ரப் ஏ சமத்**



இலங்கையின் பண்டைய காலத்தில் ஒல்லாந்தரின் ஆட்சியின் போது அவர்கள் பயன்படுத்தி விட்டுச் சென்ற பொருட்களையும் ஒல்லாந்தர்கள் இலங்கையிலிருந்து கொண்டுசென்ற பழைய பொருட்களையும் இலங்கைக்கு மீள கையளித்தல் சம்பந்தமான பண்டமாற்று ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது. இவ் ஒப்பந்தத்தில் சமய மற்றும் பௌத்த கலாசார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவும் நெதர்லாந்து நாட்டின் இராஜாங்கச் செயலாளர் கன்னே யுஎஸ்லுக்கிடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் கண்டி அரும்பொருட்

04

### நாட்டில் வரட்சியான வெப்பநிலை அதிகம்;

# குழந்தைகள் மீது அதிக கவனம் செலுத்த கோரிக்கை

### பெற்றோரிடம் Dr. தீபால் பெரேரா வேண்டுகோள்

இந்த நாட்களில் அதிக வெப்ப நிலை காரணமாக குழந்தைகளுக்கு நீர்ச்சத்து குறையாமல் இருக்க இயற்கையான திரவ உணவுகளை வழங்குமாறும் வழமையை விட அதிகமாக தண்ணீர் வழங்க வேண்டும் என்றும் கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் குழந்தை நல மருத்துவர் டொக்டர் தீபால் பெரேரா பெற்றோரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த நாட்களில் அதிக வெப்பம் நிலவுவதால் சிறுவர்கள் தொடர்பில் கடைப்பிடிக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து (27) ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.



இந்த நாட்களில், சில குழந்தைகள் காரணமின்றி அழலாம், சில குழந்தைகளுக்கு தலைவலி, வாந்தி, தூக்கம் வரலாம், சில குழந்தைகளுக்கு தூக்கமின்மை, பசியின்மை போன்ற அறிகுறிகள் ஏற்படலாம். மேலும் காய்ச்சல் இல்லாவிட்டாலும், அதிக உடல் வெப்ப நிலை மற்றும் வியர்வை காரணமாக இந்த அறிகுறிகள் ஏற்படலாம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும், அதிக உஷ்ணத்தினால் தோல் நோய்களும் ஏற்படக்கூடும் எனத் தெரிவித்த வைத்தியர் தீபால் பெரேரா, இதனைக் கட்டுப்படுத்த ஒவ்வொரு குழந்தையும் காலையிலும் மாலையிலும் 20 நிமிடங்களுக்கு ஒரு நாளைக்கு இரண்டு முறை குளிக்க வேண்டும் என்றார்.

இக்காலத்தில் தண்ணீர் பற்றாக்குறை உள்ள பிரதேசங்கள் காணப்படுவதாகவும் அவ்வாறான பிரதேசங்களில் கூட குழந்தைகளுக்கு சுத்தமான குடிநீரை வழங்க வேண்டும் எனவும் தீபால் பெரேரா மேலும் தெரிவித்துள்ளார்.

# அமைச்சுக்களுக்கிடையிலான ஒத்துழைப்பை வளர்க்க திட்டம்

### இணையவழி மூலமாக ஒன்றிணைக்க புதிய முயற்சி

ஒப்பந்தங்கள் மற்றும் புரிந்துணர்வு செயற்பாடுகளை செயற்றிறனுடன் நிர்வகிப்பதற்காகவும் அமைச்சுக்களுக்கு இடையிலான ஒத்துழைப்பை வளர்ப்பதற்காகவும் புதிய இணைய வழிமூல திட்டத்தினை ஆரம்பிப்பதற்கான கலந்துரையாடல் வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தலைமையில் நேற்று முன்தினம் (28) அமைச்சில் இடம்பெற்றது. வெளிவிவகார அமைச்சின் நடப்பு செயற்பாடுகள் மற்றும் எதிர்காலத்தில் வரவிருக்கும் பலதரப்பு ஒப்பந்தங்கள், புரிந்துணர்வு திட்டங்கள் போன்றவற்றினை செயற்றிறனுடன் நிர்வகிப்பதற்காகவும் அமைச்சுகளுக்கு

04



# சீனக் கப்பல் இலங்கை வர அனுமதி இல்லை

### வெளிவிவகார அமைச்சு




'ஷி யான் சிக்ஸ்' சீன ஆய்வுக் கப்பல் இலங்கைக்கு வருவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான கோரிக்கையை மேலும் ஆராய்ந்து வருவதாக வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. குறித்த கப்பல் இலங்கைக்கு வரும் திகதிகள் தொடர்பில் எவ்வித அறிவிப்பும் வெளியிடப்படவில்லை

04

# இந்திய பாதுகாப்பு அமைச்சர் இலங்கை வருகிறார்



இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டு எதிர்வரும் செப்டம்பர் மாதம் 02ஆம் திகதி இலங்கை வருகிறார். சீனாவின் ஆய்வுக் கப்பலின் வருகையை அனுமதிக்குமாறு அந்நாடு முன்வைத்துள்ள கோரிக்கையை இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சு பரிசீலித்து வரும் இவ்வேளையில் இந்த விஜயம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையுமென த ஹிந்து பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. இலங்கை வரும் இந்திய பாதுகாப்பு அமைச்சர் திருகோணமலைக்கு விஜயம் செய்யவுள்ளார் என்றும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அடுத்த ஜனாதிபதி தேர்தலில் அநுர

### தே.ம.ச நிறைவேற்றுக்குழு தீர்மானம்



தேசிய மக்கள் சக்தியின் அடுத்த ஜனாதிபதி தேர்தல் வேட்பாளராக கட்சியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க, தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்று குழுவினால் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தொலைக்காட்சி அரசியல் நிகழ்வொன்றில் கலந்துகொண்ட அநுரகுமார திசாநாயக்க, இதனைத் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் (28) இடம்பெற்ற நிறைவேற்று குழுக் கூட்டத்தில் இந்த தீர்மானம் எட்டப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

### இவ்வருட இரண்டாவது காலாண்டில்

# எயிட்ஸ் நோயாளர்களது தொகை பன்மடங்கு அதிகரிப்பு

### தேசிய எயிட்ஸ் கட்டுப்பாட்டு மையம் தகவல்




இலங்கையில் எயிட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை இவ்வாண்டின் இரண்டாவது காலாண்டு பகுதியில் பல மடங்காக அதிகரித்துள்ளது.

2009 ம் ஆண்டிற்கு பின்னர் இவ்வாண்டின் (2023) இரண்டாவது காலாண்டு பகுதியிலேயே எயிட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை பல மடங்காக அதிகரித்துள்ளதென தேசிய எஸ்டிடி எயிட்ஸ் கட்டுப்பாட்டு திட்டம் இந்த விபரங்களை வெளியிட்டுள்ளது.

இரண்டாவது காலாண்டு பகுதியில் 181 புதிய எயிட்ஸ் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இக்காலப்பகுதியில் புதிதாக அடையாளம் காணப்பட்ட நோயாளிகளில் 26 ஆண்களும் 3 பெண்களும் 15 முதல் 24 வயதுக்குட்பட்டவர்கள். ஏனையவர்கள் 25 வயதுக்கு மேற்பட்டவர்கள்.

இதே காலாண்டு பகுதியில் எயிட்ஸினால் 13 உயிரிழப்புகளும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
திங்கட்கிழமை 2023.08.28
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5220
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 22,280,136.00
ஆங்கில எழுத்து O
வெற்றி இலக்கங்கள் 6 0 8 7 5 8

லக்கி 7
திகதி 28.08.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0046
வெற்றி இலக்கினம் கும்பம்
L7 இலக்கம் 0 6
வெற்றி இலக்கங்கள் 5 4 7 8 3 2
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,289,007.92

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு திகதி 2023-08-28
சீட்டிழுப்பு இலக்கம் 529
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,621,896.00
வெற்றி இலக்கினம் விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள் 10 12 38 59
விசேட இலக்கினம் விருச்சிகம்

தன நிதானய
தேதி 2023/08/28
சீட்டிழுப்பு இலக்கம் 1250
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 106,884,740.80
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கங்கள் 02 25 39 79
விஷேட ஆங்கில எழுத்து M
Double Chance இலக்கம் 15397

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3462
சீட்டிழுப்பு திகதி 2023.08.28
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 60,790,442.00
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 03 17 31 75
விசேட எழுத்து K
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 06069

Mega Power
சீட்டிழுப்பு இலக்கம் 1568
28/08/2023
08809
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.405,865,208.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து N
சுப்பர் இலக்கம் 04
வெற்றி இலக்கங்கள் 04 16 41 68



நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு

**தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்**

DNCWS

**வழங்கல் தொடர்பான அறிவித்தல்**

வழங்கல் சபைத் தலைவரால் பின்வரும் பணிகளுக்கு தகைமையும் திறமையும் வாய்ந்த மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் இலக்கம் | தகைமைகள் | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) | மனு செல்லுபடியாதல் (நாட்கள்) | பிணைப் பாதுகாப்பு (ரூபா) | பிணைப் பாதுகாப்பு செல்லுபடியாதல் (நாட்கள்) | மனுக்கள் ஏற்றுக்கொள்ளும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| குருநாகல், புத்தளம், வவுனியா, மன்னார் மற்றும் அதன் CBO களுக்கு மேம்படுத்தப்பட்ட நீர் சுத்திகரிப்பு நிலையங்களை வடிவமைத்தல், வழங்குதல், விநியோகித்தல், கட்டமைத்தல், பொருத்துதல் மற்றும் கட்டளையிடுதல். ஒப்பந்த இல : **DNCWS/PRO/2023/ Advanced Water Filter Systems** | CIDA C7,C6,C5 | | | | | 2023 செப்டெம்பர் 19ஆம் திகதி மு.ப 10.00 மணி |
| லொட் 1 - குருநாகல் மாவட்டம் | | 7500.00 | 91 | 200,000.00 | 2024.01.17 | |
| லொட் 2 - புத்தளம் மாவட்டம் | | 7500.00 | 91 | 150,000.00 | 2024.01.17 | |
| லொட் 3 - வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்கள் | | 7500.00 | 91 | 150,000.00 | 2024.01.17 | |

**மேற்குறிப்பிட்ட விடயத்துக்கான பொது விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்**

01. இது தொடர்பில் ஆர்வமுள்ளவர்கள் மனுப்பத்திரங்களை மீளளிக்கப்படாத கட்டணத்தை வைப்பிலிட்டு எழுத்து மூலமான ஆவணமொன்றை சமர்ப்பிப்பதன் ஊடாக ( பணிப்பாளர் நாயகம், தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம், சட்ட இல. 0007040440 BOC) தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளலாம் ஆவணங்கள் 2023.09.18 திகதி மாலை 3.00 மணி வரை வழங்கப்படுகிறது ( மனுப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கான வழங்கல் பிரிவு)

2. ஆர்வமுள்ள மனுதாரர்கள் மேலதிக விபரங்களை தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் ஊடாக அறிந்துகொள்ள முடிவதோடு இலவசமாக மனுப்பத்திரங்களை பரிசீலனை செய்வதற்கு மனுப்பத்திரங்களை வெளியிடும் இடத்திற்கு சாதாரண வேலை நாட்களில் பிரவேசிக்கவும்.

3. விலைமனுக்களை கீழ்வரும் முகவரியிலுள்ள 2ஆம் மாடியிலிருக்கும் திணைக்களத்தில் காணப்படும் ஒப்பந்த பெட்டியிலிடவும் அல்லது பதிவுத்தபால் அல்லது குரியர் மூலமாக அனுப்பி வைக்கவும்.

4. மேலதிக விபரங்களுக்கு பணிப்பாளர் (வழங்கல்) அவர்களை தொடர்புகொள்ளவும். TP - 011 2 774927

5. 2023 செப்டெம்பர் 19ஆம் திகதி மு.ப 10.15 மணிக்கு மேற்குறிப்பிட்ட முகவரியில் மனுதாரர்கள் மற்றும் அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். பிந்திக்கிடைக்கும் மனுக்கள் ஏற்றுக்கொள்ளாது மீள அனுப்பப்படும்.

6. பிணைப் பாதுகாப்பானது பணிப்பாளர் நாயகம், தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம், இல.1114, பன்னிபிட்டிய வீதி, தலவத்துகொடை என்ற முகவரிக்கு குறிப்பிட்டிருக்க வேண்டும்.

தலைவர்,
திணைக்கள வழங்கல் சபை,
தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்,
இல. 1114, பன்னிபிட்டிய வீதி, தலவத்துகொடை.
2023.08.30


## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலிய டொலர் | 218.30 | 229.86 |
| கனடியன் டொலர் | 243.55 | 256.14 |
| யூரோ | 357.10 | 374.17 |
| ஜப்பான் யென் | 2.3040 | 2.4114 |
| சிங்கப்பூர் டொலர் | 242.85 | 255.04 |
| ஸ்ட்ரேலிங் பவுன் | 417.90 | 436.25 |
| சுவிஸ் பிராங்க் | 372.53 | 393.13 |
| அமெரிக்க டொலர் | 322.84 | 335.89 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரைன் டினார் | 873.71 | கட்டார் ரியால் | 90.39 |
| குவைத் டினார் | 1073.32 | சவூதி ரியால் | 87.82 |
| ஓமான் ரியால் | 855.52 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 89.67 |

# மேல் மாகாணத்தில் சேவையில் ஈடுபடுத்த 200 மின்சார பஸ்களை கொள்வனவு செய்ய அமைச்சரவை அங்கீகாரம்

லோரன்ஸ் செல்வநாயகம்



மேல் மாகாணத்திற்குள் மின்சார பஸ்களை சேவையில் ஈடுபடுத்தும் முன்னோடி திட்டத்திற்காக 200 பஸ்களை கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக போக்குவரத்து ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் 50 மின்சார பஸ்களை கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ள போதும் அந்த எண்ணிக்கையை 200 ஆக அதிகரிப்பதற்கு அமைச்சரவை தற்போது தீர்மானித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து அமைச்சர் என்ற வகையில் தாம் சமர்ப்பித்துள்ள அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் மின்சாரத்தில் இயங்கும் பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவது தொடர்பில் துறை சார்ந்த நிபுணர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு வருட காலம் அதற்கான ஆய்வுகளை மேற்கொண்டு இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்தப் போவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் இலங்கை போக்குவரத்து சபையும் சர்வதேச நிறுவனமும் இணைந்து இந்த திட்டத்தை முன்னெடுக்க வுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மின்சார பஸ்களின் எண்ணிக்கை குறைவடையும்போது சார்ஜிங் பொயிண்ட்டுக்காக செலவிட வேண்டிய பணம் அதிகரிக்கும் என்பதால் குறைந்தபட்சம் 200 பஸ்களை சேவையில் ஈடுபடுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு செயல்படுத்தும் போது சார்ஜிங் பொயிண்ட்டுக்காக செலவிடப்படும் பணம் சாதாரண மட்டத்தில் அமையும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். அந்த வகையில் மேல் மாகாணத்தில் 200 மின்சார பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுமானால் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள 200 பஸ்களை வேறு பிரதேசங்களில் சேவையில் ஈடுபடுத்த திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இன்றைய ஆளுமை கௌரவிப்பு விழாவில் சக்தி பண்பலை அலைவரிசைகளின் தலைவர் ஐயாத்துரை கஜமுகன்



மாதா மாதம் ஒரு ஆளுமையை கௌரவிக்கும் நிகழ்வு இன்று 2023.08.30ஆம் திகதி மாலை 3 மணிக்கு கொழும்பு 11, புறக்கோட்டை, ஐந்து லாம்புச் சந்தியிலுள்ள பழைய நகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. எழுத்தாளரும் கவிஞரும் இலக்கியவாதியுமான திருமதி வாசுகி பிவாசு கௌரவிக்கப்படவுள்ள இவ் விழாவில் சக்தி பண்பலை அலைவரிசைகளின் தலைவரும் ஊடகவியலாளருமான ஐயாத்துரை கஜமுகன் கௌரவ அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார்.

மாதம் ஒரு ஆளுமையை கௌரவிக்கும் நிகழ்வில் இன்று முதல் மற்றுமொரு திட்டத்தை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இன்று முதல் அந்தந்த மாதம் வருகின்ற ஆளுமைகளின் பிறந்தநாள் நிகழ்வையும் எளிமையாக எழிலாக கொண்டாட திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த மாதம் சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் துரைராசா சுரேஷின் பிறந்தநாள் வந்தது. இன்று 30.08.2023 பிற்பகல் 3 மணிக்கு கொழும்பு புறக்கோட்டை ஐந்து லாம்பு சந்தியில் நடைபெறும் ஆளுமை கௌரவிப்பு விழாவில் இவருடைய பிறந்தநாள் விழாவும் நடைபெறும்.

வாழும் போதே வாழ்த்துவோம் என்று வாழ்த்தி வருகின்ற இவரை இன்று நேரில் வந்து வாழ்த்த அனைவருக்கும் ஒரு வாய்ப்புள்ளது.

இவ்விழாவை தினகரன், தினகரன் வாரமஞ்சரி, சங்கவி பிலிம்ஸ் பிரைவட் லிமிட்டட், கலை ஸ்ரீ கலை மன்றம், அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம் என்பன இணைந்து நடத்தவுள்ளது.

## ரூபவாஹினி,

தேசிய ரூபவாஹினியால் முடிந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ரூபவாஹினி மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி சபை ஆகியன இணைந்ததாக Indusry Sri Lanka வேலைத்திட்டம் செயற்படுத்தப்படுவதுடன் ஊடகத்துறை அமைச்சில் அது தொடர்பாக நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தேசிய பொறிமுறையை முன்னிலைப்படுத்தி தேசிய கைத்தொழிலாளர்கள், நவீன தொழினுட்பத்தையும் காலத்துக்குப் பொருத்தமானதாக ஏற்றுமதி கேந்திர உற்பத்தி பொருளாதாரத்தை நோக்கி முன்னேற்றுவது அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும்.

அதனை முன்னோடியாகக் கொண்டே இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படுகிறது.

அதுதொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவர் கலாநிதி பிரசாத் சமரசிங்க மற்றும் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தலைவர் டாக்டர் சாரங்க அழகப்பெரும ஆகியோரால் கைச்சாத்திடப்பட்டது.

அத்துடன் அனுசரணை ஒப்பந்தம் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவர் டாக்டர் பிரசாத் சமரசிங்கவும் சனச லைப் இன்சூரன்ஸ் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி கெனடி மைக்கல் ஆகியோருக்கிடையில் மேற்கொள்ளப்பட்டது. இந்த நிகழ்வில் வங்கி அனுசரணையாளராக கொமர்ஷல் வங்கி இணைந்துள்ளது.

நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் பந்துல குணவர்தன, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைத்தொழில் அமைச்சராகபதவிவகித்த காலத்தில் உருவாக்கிய கைத்தொழில் கொள்கை நாட்டின் கைத்தொழிலை சர்வதேச சந்தைக்கு கொண்டுசெல்வதற்கு ஒத்துழைப்பு வழங்குகின்றது.

நாட்டின் கைத்தொழில் துறைக்காக வெளிநாட்டு முதலீட்டாளர்களை இணைத்துக்கொள்வது அவசியமாகும்.

அவர்களது ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதானால் நாம் தியாக மனப்பான்மையுடன் செயற்படுவதும் அவசியமாகும். சிந்தனை ரீதியான மாற்றங்கள் அவசியம்.

நாட்டுக்கு வெளிநாட்டு அந்நிய செலாவணியைக் கொண்டுவரும் பல திட்டங்கள் உள்ளன. அவர்களை ஊக்குவிப்பது அவசியமாகும். அவர்களை ஊக்குவிப்பதற்கான செயற்பாடுகளில் ஊடகங்களும் பங்களிப்புச் செய்ய வேண்டுமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இந்தோனேசியாவில்... (03ஆம் பக்கத் தொடர்)

கீழே 516 கிலோமீற்றர் (320.63 மைல்) மிக ஆழமாகவும் இருந்தது என (EMSC) தெரிவித்துள்ளது.

இதனைத்தொடர்ந்து ரிச்டர் அளவு கோலில் 7.1 ஆக பதிவாகியுள்ளதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேலும் கடலுக்கு அடியில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தின் விளைவாக சுனாமி அச்சுறுத்தல் எதுவும் இல்லை என அமெரிக்க சுனாமி எச்சரிக்கை அமைப்பு தெரிவித்துள்ளது.

## நெதர்லாந்து - இலங்கை... (03ஆம் பக்கத் தொடர்)

காட்சி சாலைகளில் உள்ள பண்டைய பொருட்களுக்கான இலங்கையில் இருந்து எடுத்துச் செல்லப்பட்ட இலங்கை உபகரணங்களை மீள கையளித்தல் அதே போன்று கண்டி அரும் பொருட் காட்சிச் சாலைகளில் உள்ள ஒல்லாந்தர்களுடைய பண்டைய பொருட்களை கையளித்தல் என இவ் ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளது. இந் நிகழ்வில் நெதர்லாந்து தூதுவரும் கலந்து கொண்டார்.

## அமைச்சுக்களுக்... (03ஆம் பக்கத் தொடர்)

இடையிலான ஒத்துழைப்பை வளர்ப்பதற்காகவும் இந்த புதிய இணைய வழிமூல வசதிகள் வடிவமைக்கப்பட்டு, ஆரம்பம் செய்யப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

பன்முகத்தன்மை கொண்ட இந்த முயற்சியானது ஒப்பந்தங்கள் மற்றும் புரிந்துணர்வு செயற்பாடுகள் தொடர்பான பின்தொடர்தல் மற்றும் கண்காணிப்பு போன்றவற்றின் வினைத்திறனான செயற்றிறன்களை மதிப்பீடு செய்து அவற்றை இணையவழி ஊடாக பேணுவதற்கு வசதியாக அமையும்.

இக் கலந்துரையாடலில் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய உட்பட ஏனைய அமைச்சுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

## சீனக் கப்பல் இலங்கை வர... (03ஆம் பக்கத் தொடர்)

எனவும் வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

எவ்வாறாயினும், வெளிவிவகார அமைச்சு மற்றும் நாரா நிறுவனம் விடுத்த கோரிக்கைக்கு அமைய குறித்த கப்பலுக்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி வழங்கப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு கூறியிருந்தது. எவ்வாறாயினும், கடல்சார் பாதுகாப்பில் கவனம் செலுத்தி சீன ஆராய்ச்சிக் கப்பலின் வருகை குறித்து இந்திய அரசாங்கம் இலங்கையிடம் கவலை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வெளிநாட்டு...

ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விசேட அறிவுறுத்தலை வழங்கியுள்ளார்.

அமைச்சரவைக் கூட்டத்தின் போது,ஜனாதிபதி மேற்படி தம்தீர்மானத்தை அறிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிராக எதிர்க்கட்சியினரால் கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை இந்த தினங்களில் விவாதிக்கப்படவுள்ளதால் வாக்கெடுப்பின் போது அவர்கள் பாராளுமன்றத்தில் இருக்கவேண்டியதன் அவசியத்தை கருத்திற்கொண்டே ஜனாதிபதி இந்த அறிவுறுத்தலை வழங்கியுள்ளார்.

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிராக சபையில் கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லா பிரேரணைக்கான விவாதத்திற்கு இரண்டு அல்லது மூன்று தினங்கள் ஒதுக்கப்படவேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட எதிர்க்கட்சியினர் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ள நிலையில் ஆளும் தரப்பினர் அதற்கு இணக்கம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திருத்தங்களை...

அங்கீகாரமளித்துள்ளது.

1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தை நீக்கி பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்ட மூலத்தை அரச வர்த்தமானியில் வெளிளிடுவதற்காக கடந்த 27 ஆம் திகதி மார்ச் மாதம் 2023 ஆண்டு இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள குறித்த சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு சில பிரிவுகள் தொடர்பாக ஆர்வம் காட்டுகின்ற பல தரப்பினர்களால் முன்வைக்கப்பட்டுள்ள கருத்துக்களைக் கருத்தில் கொண்டு அச்சட்ட மூலத்திற்கு தேவையாக திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## வீசா முறைகளை...

1948 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டம் மற்றும் அதன்கீழ் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கு அமைய எமது நாட்டுக்கு வருகை தருகின்ற வெளிநாட்டவர்களுக்கு குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தால் வருகைதரு வீசா, வதிவிட வீசா மற்றும் பயண வீசா என 3 வகையான வீசாக்கள் வழங்கப்படுகின்றன.

வருகைதரு வீசா மற்றும் வதிவிட வீசா ஆகிய 2 வகையான வீசா முறைமையின் கீழ் வழங்கப்படுகின்ற வீசா வகைகளில் காணப்படுகின்ற சிக்கலான தன்மையைக் கருத்தில் கொண்டு அதிகளவிலான வெளிநாட்டவர்களைக் கவர்ந்திழுக்கின்ற வீசா முறைகளைக் கருத்திலெடுத்து எமது நாட்டில் நடைமுறையிலுள்ள வீசா முறையை மீண்டும் மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 'அஸ்வெசும'...

இதேநேரம் ஊனமுற்றோர், முதியோர், சிறுநீரக நோயாளர் ஆகியோருக்கான கொடுப்பனவுகள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க குறிப்பிட்டார்.

'அஸ்வெசும' குறித்த அனைத்து விபரங்களையும் '1924' என்ற துரித தொலைபேசி எண் மூலம், வார நாட்களில் காலை 9 மணி முதல் 4.00 மணி வரை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

## தவறான....

செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அஸ்வெசும நலன்புரித் திட்டம் குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது, அஸ்வெசும நலன்புரித் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 15 இலட்ச பயனாளர்களில் வங்கி வைப்பு உள்ளிட்ட சரியான தகவல்களை வழங்கிய 8 இலட்ச பயனாளர்களுக்கு கடந்த மாதத்துக்கான ( ஜூலை) கொடுப்பனவுகளை வழங்க திறைசேரி நேற்றைய தினம் 5 பில்லியன் ரூபாவை சகல அரச வங்கிகளுக்கும் விடுவித்துள்ளது.

பயனாளர்கள் எவ்வித அசௌகரியங்களும் இல்லாமல் கொடுப்பனவுகளை வழங்குவதற்கான பிரத்தியேக வழிமுறைகளை முன்னெடுக்குமாறு அரச வங்கி அதிகாரிகளுக்கு வலியுறுத்தியுள்ளேன்.

தவறான தகவல்களை வழங்கி நலன்புரி கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## அரச வங்கிகள் ...

அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் நேற்று முன்தினம் முதல் விபரம் சரிபார்க்கப்பட்ட 8 லட்சம் பயனாளிகளுக்குரிய, ஜூலை மாதத்துக்கான அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவு வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இடைக்கால...

சட்ட மா அதிபர் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

கடல் சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை சமர்ப்பித்த இடைக்கால இழப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் இந்த இழப்பீடு பெறப்படவுள்ளது.

கடல் சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையினால் இடைக்கால நட்டஈடாக 890 இலட்சம் டொலர் மற்றும் 16 மில்லியன் ரூபா கோரப்பட்டுள்ளதாக சட்ட மா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இடைக்கால இழப்பீட்டை வழங்குவதற்கு கப்பல் நிறுவன காப்புறுதி நிறுவனமும் சட்டத்தரணிகள் நிறுவனமும் ஏற்கனவே இணக்கம் தெரிவித்திருந்தன. அது தொடர்பான அரசாங்கத்தின் இணக்கப்பாட்டை அந்த நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சட்ட மா அதிபர் திணைக்களம் கூறியுள்ளது.

அண்மையில் சிங்கப்பூரில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய, இரு தரப்பினரும் இந்த இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளனர்.

## சுற்றுலா பயணிகள்....

அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் முழுவதும், மொத்தமாக 7 இலட்சத்து 19 ஆயிரத்து 978 சுற்றுலாப்பயணிகளே நாட்டிற்கு வருகைத்தந்திருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன் படி, இந்த வருடம் இந்தியா மற்றும் ரஷ்யாவில் இருந்து ஒரு இலட்சம் சுற்றுலாப்பயணிகள் வருகைத்தந்துள்ளதுடன் பிரித்தானியா மற்றும் ஜேர்மனியில் இருந்து 50 ஆயிரம் பேர் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர்.

## இந்தியாவிலிருந்து...

தேசிய கொள்கை அமைச்சர் என்றவகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. தேசிய வர்த்தக சந்தையில் முட்டையின் விலை அதிகரிப்பு மற்றும் முட்டைகளுக்கான தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்யும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதுடன், அரச வாணிப கூட்டுத்தாபனத்தின் மூலம் இந்தியாவிலிருந்து முட்டையை இறக்குமதிசெய்து தேசிய சந்தைகளுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதுடன் அதற்கான அனுமதி ஏற்கனவே அமைச்சரவை வழங்கியிருந்தது. அதற்கிணங்க, கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பரிந்துரைக்கிணங்க 3 இந்திய நிறுவனங்களிலிருந்து விலைகள் கோரப்பட்டிருந்த நிலையில், அந்த நிறுவனங்களிடமிருந்து முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## இம்ரான்....

தெரிவிக்கப்படுகிறது.

2018ஆம் ஆண்டு முதல் 2022ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பிரதமராக இருந்தபோது அரச பரிசுகளை சட்டவிரோதமாக விற்ற குற்றச்சாட்டில் கடந்த 5ஆம் திகதி இம்ரான் கானுக்கு மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

அத்துடன் தண்டனையின் விளைவாக, அந்த நாட்டின் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் தேர்தலில் போட்டியிட அவருக்கு ஐந்தாண்டுகளுக்கு தடையும் விதிக்கப்பட்டது.

இந்தநிலையில், நேற்றைய தினம் பாகிஸ்தானின் முன்னாள் பிரதமருக்கு எதிரான தண்டனைகளை இடைநிறுத்தி அவருக்கு பிணை வழங்குவதற்கு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

## மூத்த பிரஜைகளின்...

கலந்துகொண்டு உரையாற்றும் போது இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர், சிரேஷ்ட பிரஜைகளுக்கு மட்டுமன்றி வருடாந்தம் 12.5 ரூபாவுக்கு அதிகமான வரி வருமானத்தை பெற்றுக் கொள்வோரிடமிருந்து நூற்றுக்கு 5 வீத தடுத்து வைப்பு வரி இந்த வருடத்தின் ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் மாதாந்தம் ஒரு இலட்சத்துக்கும் குறைவான வட்டி வருமானத்தைப்பெறும் சிரேஷ்ட பிரஜைகளிடமிருந்தும் அந்த தடுத்து வைப்பு வரிஅறவிடப்பட்டதுடன் அதனை மீள வழங்குவதற்கு அவர்கள் வேண்டுகோள் விடுத்திருந்தனர். நாம் அது தொடர்பில் மனிதாபிமான ரீதியில் கவனம் செலுத்தினோம்.

அதனையடுத்து, அவர்களிடமிருந்து அறவிடப்பட்ட அந்த நிதியை மீள வழங்குவது தொடர்பில் தேசிய வருமான வரி திணைக்களத்துடன் பேச்சுவார்த்தை நடத்தினோம். அதில் மேற்கொண்ட தீர்மானத்துக்கு அமைய, எதிர்வரும் செப்டெம்பர் 10ஆம் திகதி முதல் பெற்றுக் கொண்ட அந்த பணத்தை மீண்டும் வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது என்றும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பிறப்புச் சான்றிதழ்....

அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

40 வயதுக்கு மேற்பட்ட இலங்கைப் பிரஜைகள், கிராம உத்தியோகத்தர் பிரிவில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவர்கள், வாக்காளர் பதிவேட்டில் பதிவு செய்தவர்கள், பிறப்புச் சான்றிதழ் இல்லாத காரணத்தினால் இதுவரை தேசிய அடையாள அட்டையைப் பெறாதவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கையில்...

(29) இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இச் சந்திப்பின் போது இலங்கையில் மீன்களுக்கான உணவு, கடலுணவு உற்பத்தி தொழிற்சாலை மற்றும் மீன்பிடி படகு தொழிற்சாலை ஆகிய துறைகளில் முதலீடு செய்வது தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன் கிழக்கு மாகாணத்தின் ஒலுவில் கடற்றொழில் துறைமுக வளாகத்தில் இத் தொழிற்சாலைகளை ஆரம்பிக்க விரும்புவதாகவும் அவர் அமைச்சரிடம் சுட்டிக் காட்டினார்.

தொடரந்து கருத்து தெரிவித்த கொரிய தொழிலதிபர், இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு தாம் மிகவும் ஆர்வத்துடன் இருப்பதாகவும் அதற்கான உதவிகள் கடற்றொழில் அமைச்சர் மற்றும் கடற்றொழில் அமைச்சின் ஊடாக வழங்கப்பட்டால் பல பில்லியன் ரூபாக்களை முதலீடு செய்வதற்கு தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து கருத்து தெரிவித்த கடற்றொழில் அமைச்சர், ஒலுவில் கடற்றொழில் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்ததுடன் அதனடிப்படையில் குறித்த தொழிற்சாலைகளை நிர்மாணிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார். அத்துடன், இத் தொழிற்சாலை இலங்கை முதலீட்டுச் சபையின் (BOI) கீழ் ஆரம்பிக்கப்பட வேண்டுமெனவும் அதன் பொருட்டு வர்த்தக அமைச்சுடன் பேசி உரிய நவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

## CID விசாரணை...

விசாரணை நடவடிக்கைகள் தற்போது 99% நிறைவடைந்துள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

மேற்படி குண்டுத் தாக்குதல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள விசாரணைகளின் அறிக்கை கத்தோலிக்க திருச்சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் எனினும் அந்தத் தரப்பினர் இதுவரை அதுதொடர்பில் எந்தப் பதிலையும் வழங்கவில்லையென்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் உண்மையை கண்டறிவதானால் கத்தோலிக்க திருச்சபையும் கத்தோலிக்க சமையமும் அது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் அதிகாரிகளுடன் ஒத்துழைப்புடன் செயற்படுவது முக்கியமென்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் விளக்கமளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதேவேளை, பாடசாலை மாணவர்கள் போதைப்பொருளுக்கு அடிமைப்பட்டுள்ள நிலையை கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் எத்தகைய வேலைத்திட்டங்களை மேற்கொண்டுள்ளது என ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளித்த அமைச்சர், அரசாங்கம் அதுதொடர்பில் உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## சமுர்த்தி...

கீழ் தமது விருப்பத்தை வெளிப்படுத்திய உத்தியோகத்தர்கள் அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய 60 வீத ஊழியர் சேமலாப பங்களிப்பு நிதியை செலுத்துவதில் 4 வீத மேலதிக வட்டியை அறவிட தீர்மானித்துள்ளமை நியாயமற்றதாகும் என்று தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தில் பதவிகள் மற்றும் ஊழியர்கள் எண்ணிக்கைக்கான அங்கீகாரம் , சமுர்த்தி உத்தியோகத்தர்களை எம். என் 02 சம்பள அளவுத்திட்டத்தில் நிறுவுதல், பதவி உயர்வு முறைமையை அமைத்தல், சமுர்த்தி அபிவிருத்தி சேவைக் காலத்துடன் சமுர்த்தி ஊழியர் சேவைக் காலத்தை சேர்த்தல், விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய நிதிக்கான நிலுவைத் தொகையில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான கூட்டு வட்டியுடனான 4 வீத மிகை கட்டணம் போன்ற பல விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு தடையாக உள்ள கட்டளைச் சட்டங்கள், சுற்றறிக்கைகள் மற்றும் அமைச்சரவை தீர்மானங்கள் தொடர்பான விடயங்களை அதிகாரிகள் விளக்கியதுடன், நாடு நெருக்கடியை எதிர்நோக்கும் இத்தருணத்தில் இந்த பிரச்சினைகளை சுமுகமாக தீர்த்து வைப்பதற்கு அனைவரினதும் அர்ப்பணிப்பு அவசியம் எனவும் பிரதமர் குறிப்பிட்டார்.

மேலும், அரச ஊழியர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படாதிருப்பது, செயலாற்றுகை பின்னடைவதற்கு காரணம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொள்கையில் தெளிவு! நெஞ்சிலே துணிவு! செயலிலே வேகம்! ஓயாத உழைப்பு! தளராத நம்பிக்கை! ஐந்து அம்சங்களைக் கொண்டு தொழிலாளர்களுக்காக போராடப் புறப்பட்டவர் தொழிற்சங்க மாவீரர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான்



ஐயாவின் பணிகளை அவரது 110ஆவது பிறந்த தினமான இன்றைய நாளில் நினைவு கூர்வதில் பெருமிதமடைகின்றோம்

– இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்

– இலங்கை இந்திய சமுதாயப் பேரவை

## அமரர் தொண்டமானின் அரசியல் வாழ்க்கை

1960ல் பாராளுமன்ற நியமன அங்கத்தவரானார்
1965லும் மீண்டும் பாராளுமன்றத்தின் நியமன அங்கத்துவம் கிடைக்கப் பெற்றது.
1977ல் நுவரெலியா – மஸ்கெலியா பல அங்கத்தவர் தொகுதியில் போட்டியிட்டு பாராளுமன்றத்திற்கு தெரிவானார்.
1978ல் கிராமிய கைத்தொழில் அமைச்சராக பதவி பிரமாணம் செய்து கொண்டார்.
1989ல் புடவை கைத்தொழில் அமைச்சராக பொறுப்பினை ஏற்றுக் கொண்டார்.
1990ல் உல்லாச பிரயாண கைத்தொழில் அமைச்சரானார்.
1994ல் தேசிய பட்டியல் மூலம் பாராளுமன்ற அங்கத்தவரானார்.
1994ல் கால்நடை அபிவிருத்தி கிராமிய கைத்தொழில் அமைச்சராக நியமிக்கப்பட்டார்.
1995ல் கால்நடை அபிவிருத்தி, தோட்ட உட்கட்டமைப்பு அமைச்–சராக 1999 வரையிலும் பதவி வகித்தார்.
1999.10.30ல் இவ்வுலகை விட்டு பிரிந்தார்
2001.08.30ல் தேசிய தலைவர்கள் வரிசையில் அமரருக்கு உருவச்சிலை பழைய பாராளுமன்றக் கட்டத்தொகுதியில் நிறுவப்பட்டது.

### அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களின் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட அமைப்புகள்

தொண்டமான் ஞாபகார்த்த மன்றம் – கொழும்பு
தொண்டமான் தொழிற் பயிற்சி நிலையம் – ஹட்டன்
தொண்டமான் கலாசார மண்டபம் – இறம்பொடை, நுவரெலியா
தொண்டமான் விளையாட்டு அரங்கு – நோர்வூட் ஆகியன மூலம் மலையக மக்களுக்கு சேவை வழங்கப்பட்டு வருகிறது. அமரர் சௌமயமூர்த்தி தொண்டமான் அவர்களின் 110 ஆவது பிறந்த தினத்தை நினைவு கூருவதில் நாமும், மலையகமும், மலையக மக்களும் அவரது பணிகளை நினைத்துப் பார்ப்ப தில் பெருமிதம் கொள்கின்றோம். அமரருக்கு எமது நிறைவான அஞ்–சலியை செலுத்துகின்றோம்.











# அனைத்து மக்களின் நன்மதிப்பை பெற்ற தொழிலாளர் திலகம்

## அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் நினைவு தினம் இன்று

மலையக மக்களின் பெரும் சொத்தாகவும், மலையக அரசியல் தொழிற்சங்க சிருஷ்டி கர்த்தாவாகவும் விளங்கியவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான். அடிமட்டம் முதல் உயர் மட்டம் வரை மக்களின் நன்மதிப்பையும், சர்வ தேச மட்டத்திலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உன்னத தலைவன் என்பதை நினைவு கூராமல் இருந்து விட முடியாது. இன்று அவரது (30.08.2023) 110 ஆவது ஜனன தினத்தில் அவர் மக்களுக்காக ஆற்றிய சேவை களையும், விட்டுச் சென்ற பணிகளையும் எண்ணிப் பார்க்கின்றோம்.

மலையக பெருந்தோட்டத்துறை மக்கள் அன்றைய அரசாங்கங்களாலும் தோட்ட நிர்வாகங்கள், கம்ப னிகளாலும், மனிதாபிமானமற்ற முறையில் ஆட்டி படைக்கப்பட்டார்கள். பாகுபாடுகள், பாரபட்சங்கள், ஒடுக்குமுறைகள், பழிவாங்கல், ஆகியவை இந்த இரு தரப்புகளாலும் கட்டவிழ்க்கப்பட்டன.

ஆங்காங்கே கண்டனக் கூட்டங்களும், விழிப்பு ணர்ச்சிக் கூட்டங்களும் பரவலாக நடத்தப்பட்டன. இதேவேளை பெருந்தோட்டங்களில் தொழிலாளர்கள் திடீர் திடீர் என வேலையில் இருந்து நீக்கப்படுவதற் கும், தோட்டங்களில் இருந்து விரட்டப்படுவதற்கும், அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுவதற்கும், தொழி லாளர் சமூகம் நசுக்கப்படுவதற்கும், கடும் ஆட்சேப னைகள் தெரிவித்து அந்த காலகட்டங்களில் பல்வேறு வேலை நிறுத்தப் போராட்டங்கள் நடத்தப்பட்டுள் ளன.இவற்றில் குறிப்பிடத்தக்கது உருளைவள்ளிப் போராட்டம், மடக்கும்புர போராட்டம், மடுல்கலை கலாபொக்க போராட்டம், ஆகியவை இவற்றில் முக் கியமானவையாகும்.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள நிர்ணய கோட்பாடு மலையக பெருந்தோட்டங்கள் காலனித் துவ காலத்தில் ஆங்கிலேயரின் நிர்வாகத்தின் கீழும் நிறுவனங்களின் கீழும் செயல்பட்டன. சுதேசிகளு டைய நிர்வாகங்களுக்கு கீழும் இயங்கி வந்துள்ளன. ஆனால் அக்காலத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கு நிர்ணயிக்கப்படாத நிரந்தரமற்ற சம்பளமே வழங்கப் பட்டு வந்தது.

தோட்டங்கள் அரசுடமையாக்கப்பட்ட பின்னரும் 'உசவசம, ஜனவசம' ஆகிய அரச நிறுவனங்களுக்கு கீழ் தோட்டங்கள் நிர்வகிக்கப்பட்டன. இக்காலகட் டங்களில் கூட தொழிலாளர்களது மாத சம்பளம் நிர்ணயிக்கப்படவில்லை. எவ்வாறாயினும் தனியார் துறையாக இருந்த போதும், அரசதுறையாக இருந்த போதும், காத்திரமான போராட்டங்கள் நடத்தப்பட் டன. பேச்சுவார்த்தைகளும் இடம்பெற்றுள்ளன. எனினும் காரியம் கைகூடவில்லை.

வரட்சி காலத்திலும், மழை காலத்திலும், சம்பளத் தில் எந்தவித மாற்றமும் ஏற்படுத்தப்படவில்லை. அதேவேளை ஒரு நாள் பேருக்கு எடுக்கப்பட வேண்டிய கொழுந்தின் எடையிலும் ஒரு கட்டுப் பாடு விதிக்கப்படவில்லை. ஒரு நாள் பேருக்கு 25 தொடக்கம் 30 இறாத்தல் கொழுந்து பறிக்கப்பட வேண்டும் என கொண்டு வந்தார்கள். இதே போன்று பல தோட்டங்களிலும் ஒரு நாள் பேருக்கு எடுக்கப்பட வேண்டிய எடையை ஒரே விதமாக கொண்டிருக்கப்ப டவில்லை. அவற்றில் சில தோட்டங்களில் ஒரு நாள் பேருக்கு கூடுதலான கொழுந்தை பறிக்க வேண்டு மென தோட்ட நிர்வாகம் நிர்ப்பந்தித்தது. குறைவாக பறிக்கப்பட்ட கொழுந்திற்கு 'அரை பேர் போடப்பட் டது'.

தோட்ட நிர்வாகங்கள் ஒரு நாள் பேருக்கு கொழுந் தின் எடையை தங்களின் இஷ்டப்படி நிர்ணயித்ததன் விளைவாக பலர் கஷ்டப்பட்டும் முழுப்பயனை அடையவில்லை. கடைசி காலத்தில் தேயிலைகள் கருகி கொழுந்துகள் குறைந்து விடுகின்றன. இந்த சமயத்தில் அதே நிர்ணயிக்கப்பட்ட எடையை எதிர் பார்க்க முடியாது. அதற்காக தோட்ட நிர்வாகங்கள் கொழுந்தின் எடையில் கடும் வரட்சிக்காலத்தில் ஒரு மாற்றத்தை புகுத்தவில்லை.

இந்த விதமான தோட்ட நிர்வாகங்களின் கெடுபிடி களின் மத்தியில் அவர்களின் விமோசனம் அளிக்கும் திட்டமாகவும், தொழிலாளர்களுக்கு ஒரு நியாயபூர்வ மான ஒரு சம்பளத்தினை கூட்டு ஒப்பந்தத்தின் ஊடாக பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத் துடன் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர் களின் தலைமையில் சம்பள கூட்டு உடன்படிக்கை முதலாவது கூட்டு ஒப்பந்தம் 1967ம் ஆண்டும், இரண்டாவது தடவையாக 1992ம் ஆண்டு ஏற்படுத் தப்பட்டது.

இந்த கூட்டு உடன்படிக்கையானது தோட்டத் தொழி லாளர்களின் மத்தியில் ஒரு சக்தி வாய்ந்த ஆயுதம். இதனை இழந்து விட்டால் பல வழிகளிலும் தொழிலா ளர்கள் ஊதியங்களைப் பொறுத்தமட்டில் வஞ்சிக்கப் பட்டும், ஏமாற்றப்பட்டும், ஒடுக்கப்பட்டும் விடுவார் கள். இதை தொழிற்சங்கங்களுக்குள் பிரவேசிக்கும் எவரும் மறந்துவிட முடியாது.

கூட்டு ஒப்பந்தத்தின் செயற்பாட்டால் நிர்வாகங்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றன. இல்லையேல் தோட்டத் தொழிலாளர்கள் கொத்தடிமைகளாக பழிவாங்கப் பட்டிருப்பார்கள். அமரர் சௌமியமூர்த்தி தொண்ட மான் அவர்களின் சாதுரியத்தாலும், அணுகுமுறையா லும் தான் தொழிலாளர்களின ஒட்டுமொத்தப்பலம் தோட்ட நிர்வாகங்களுக்கு எடுத்துக்காட்டப்பட்டுள் ளது. இந்த பலத்துக்கு அஞ்சியே முதலாளிமார் சம் மேளனம், தோட்டக் கம்பனிகள், நிர்வாகங்கள் சமபள உயர்வுகளை உயர்த்துவதற்கு முன் வருகின்றன. இது தொழிலாளர்களுக்கு ஒரு பிடிமானமாகும்.

இதற்குப் பின்னராக இந்த நாட்டில் அரசியல் ரீதியாக பல மாற்றங்கள் ஏற்பட்டன. காலத்தின் நிர் பந்தத்தால், ஏற்பட்ட இந்த மாற்றங்களின் விளைவாக அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் நியமன அங்கத் தவராக பதவி பிரமாணம் செய்து கொண்டார்.

ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தத்தின் அடிப்படையில் மலையக தமிழர்களின் ஒரு பகுதியினருக்கு இலங்கை பிரஜாவுரிமையும் மற்றொரு பகுதியினருக்கு இந்திய பிரஜாவுரிமையும் வழங்கப்பட்டன. இந்த காலகட் டத்தில் இலங்கை வாக்குரிமை பெற்ற மக்களின் சார்பில் இ.தொ.கா அரசியல் பிரிவு தேர்தல் களத்தில் குதித்து பல வெற்றிகளை பெற்று வந்துள்ளது. இன்று மலையக தமிழர்களும், அமைச்சர்களாகவும், பிரதி அமைச்சர்களாகவும் மாகாணசபை அமைச்சர்களாவும், மாகாணசபை, பிரதேசசபை, உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.இவற்றுக்கெல்லாம் முன்னுதாரணமாக மலையகத்தைப் பொறுத்தமட்டில் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானே இலங்கை யில் முதன் முறையாகவும் அமைச்சராக விளங்கினார்.

அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் இ.தொ. கா தலைவராக இருந்த போதும் உலகத் தலைவர்கள் சர்வதேச தொழிற்சங்க பிரமுகர்கள் ஆகியோரை சந் தித்து பெருந்தோட்டத்துறை மக்களின் கஷ்டங்களை யும், அவலங்களையும் வெளிப்படுத்தி இவர்களது மேம்பாட்டிற்காக சர்வதேச மட்டத்தில் குரல் எழுப்பி வந்துள்ளார்.















தேவதாஸ் சவரிமுத்து
சிரேஷ்ட ஊடக இணைப்பாளர்
இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் ஆவணி மாதம் 14ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஸபர் பிறை 13

### குறள் தரும் சிந்தனை

அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும்

பிறருடைய குறைகளை மறைப்பது பெருமைப் பண்பாகும். பிறருடைய குற்றங்களையே கூறிக்கொண்டிருப்பது சிறுமைக் குணமாகும்.

# உலகுக்கு முன்மாதிரியாகிய பொருளாதார முன்னேற்றம்

நாடு கடந்த வருடத்தின் ஆரம்பப் பகுதியில் கடும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளானது. அதனால் மக்கள் பல்வேறு விதமான நெருக்கடிகளையும் அசௌகரியங்களையும் எதிர்கொண்டனர். குறிப்பாக எரிபொருள், எரிவாயுவுக்காக நாட்கணக்கில் வரிசைகளில் காத்திருக்கும் நிலைக்கு மக்கள் உள்ளாகினர். தினமும் பல மணித்தியாலயங்கள் மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டது. பணவீக்கமும் அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட அனைத்துப் பொருட்களது விலைகளும் பெரிதும் அதிகரித்து காணப்பட்டன. அதேநேரம் ரூபாவின் டொலருக்கு நிகரான பெறுமதியும் பெரிதும் வீழ்ச்சியடைந்திருந்தது. இந்நிலையில் பொருளாதார நெருக்கடியில் இருந்து நிவாரணமும் சலுகைகளும் கோரி ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்றன.

இந்நிலையில் நாட்டின் அரசியலும் கொதிநிலையை அடைந்தது. அதன் விளைவாக அன்றைய பிரதமர் தலைமையிலான அமைச்சரவை பதவி விலகும் நிலைக்கு உள்ளானது. அதனைத் தொடர்ந்து சொற்ப காலத்தில் அன்றைய ஜனாதிபதியும் பதவி விலகினார்.

ஆனால் இந்தப் பதவி விலகல்கள் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வாக அமையவும் இல்லை. மக்களுக்கு நிவாரணத்தையோ சலுகைகளையோ பெற்றுக்கொடுக்கவும் இல்லை. அதேநேரம் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி வங்குரோத்து நிலையை அடைந்திருந்த நாட்டை பொறுப்பெடுக்க எவரும் முன்வராத இக்கட்டான நிலைமையும் உருவானது.

இந்தச் சூழலில் நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் தலைமைப் பதவியை ஏற்றார். அவர் நாட்டின் பாராளுமன்ற செயற்பாட்டு அரசியலில் நான்கரை தசாப்தங்களுக்கும் மேற்பட்ட பரந்த அனுபவத்தைப் பெற்றுள்ளவர். கடந்த காலங்களில் நாடு பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்த போது அந்நெருக்கடிகளை சிறந்த முறையில் கையாண்டு நாட்டை வெற்றிகரமாக மீண்டடெடுத்தவர் அவர். அவ்வாறான பரந்துபட்ட அனுபவங்களின் அடிப்படையில் இப்பொருளாதார நெருக்கடியையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிறந்த முறையில் கையாளலானார்.

நாட்டின் தலைமைப் பதவியை ஏற்றது முதல் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான வேலைத்திட்டங்களை விரிவான அடிப்படையில் அவர் ஆரம்பித்தார். அதன் பிரதிபலன்களை குறுகிய காலத்தில் மக்கள் பெற்றுக்கொள்ளத் தொடங்கினர். எரிபொருளுக்கும் எரிவாயுவுக்கும் நாட்கணக்கில் காத்திருக்கும் யுகம் கட்டம் கட்டமாக முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. வாகனப் போக்குவரத்து சில வாரங்களில் வழமைக்குத் திரும்பியது.

அத்தோடு இவ்வருடத்தின் ஆரம்பம் முதல் பணவீக்கம் தொடராக வீழ்ச்சி அடைந்து வந்ததோடு, தற்போது ஒற்றை இலக்கத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. ரூபாவுக்கு நிகரான டொலரின் பெறுமதியும் வீழ்ச்சி அடைந்திருக்கிறது. அத்தியாவசியப் பொருட்கள் உட்பட பல்வேறு பொருட்களது விலைகளும் அவ்வப்போது குறைக்கப்பட்டுள்ளன.

பொருளாதார ரீதியில் நாட்டைக் கட்டியெழுப்பும் நோக்கில் முன்னெடுக்கப்பட்டுவரும் வேலைத்திட்டங்கள் குறுகிய காலம் முதல் பிரதிபலன்களை அளிக்கத் தொடங்கியதன் பயனாக இந்நாடு பொருளாதார நெருக்கடிக்கு உள்ளானதா என வினவப்படும் அளவுக்கு நிலைமை முன்னேற்றம் அடைந்திருக்கின்றது.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல், கொவிட் 19 பெருந்தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி என்பன காரணமாக வெகுவாக வீழ்ச்சியடைந்திருந்த நாட்டின் தலைமையைப் பொறுப்பெடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்த பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் ஒரு வருட காலத்திற்குள் நாட்டை இயல்பு நிலைக்கு கொண்டு வந்துள்ளன. ஜனாதிபதியின் தலைமைக்கும் அவரது வேலைத்திட்டங்களுக்கும் கிடைக்கப்பெற்றுள்ள வெற்றியே இது.

இலங்கை கடந்த வருடம் முகம்கொடுத்தது போன்ற பொருளாதார நெருக்கடிக்கு உலகில் பல நாடுகள் ஏற்கனவே முகம்கொடுத்தன. ஆனால் இலங்கையைப் போன்று விரைவாகவும் வேகமாகவும் எந்தவொரு நாடும் மீட்சி பெ றவில்லை. அந்தளவுக்கு சிறந்த முறையில் பொ ருளாதார மீட்சிக்கான வேலைத்திட்டங்கள் இங்கு முன்னெடுக்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறான சூழலில் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட இணைப்பாளர் மார்க் அன்ட்ரூ ப்ரன்சே நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவைச் சந்தித்து கலந்துரையாடிய போது, 'பொருளாதார ரீதியில் கடந்த காலங்களில் வீழச்சியடைந்திருந்த உலகில் 20 நாடுகளில் விரைவாக மீளக்கட்டியெழுப்பப்பட்ட நாடாக இலங்கையைக் குறிப்பிட முடியும் என்று குறிப்பிட்டுள்ளதோடு ஏனைய நாடுகள் இலங்கையை முன்னுதாரணமாகக் கொள்ள முடியும் என்பதே ஐ.நா. செயலாளர் நாயகத்தின் கருத்து எனவும் கூறியுள்ளார்.

ஆகவே பொருளாதார ரீதியில் நாட்டைக் கட்டியெழுப்பவென ஜனாதிபதி முன்னெடுத்துவரும் வேலைத் திட்டங்களுக்கு கிடைத்துவரும் பிரதிபலங்களுக்கான அங்கீகாரத்தையே ஐ.நா வதிவிட இணைப்பாளரின் கூற்று வெளிப்படுத்தி நிற்கின்றது. அதனால் கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பால் நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கப்பட வேண்டும். அதுவே இன்றைய தேவையாகும்.

editor.tkn@lakehouse.lk

# தோட்டத் தொழிலாளருக்கான வீடமைப்புத் திட்டங்கள் துரிதப்படுத்தப்பட வேண்டும்



மலையக மக்களின் தலையாய பிரச்சினைகளில் ஒன்று குடியிருப்பு பற்றியதாகும். இன்றுவரை அவர்களுக்கான ஒழுங்கமைக்கப்பட்ட குடியிருப்புத் திட்டம் முன்வைக்கப்படவில்லை. வீடு மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாக இருப்பதோடு,தனி மனிதன்,குடும்பம்,சமூகம் ஆகியவற்றின் வாழ்க்கைத் தரத்தினை வடிவமைப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

19 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப கட்டங்களில் கட்டப்பட்ட லயன் அறைகளிலேயே 56 வீதமான தொழிலாளர்கள் தொடர்ந்து வசிக்கின்றனர். தோட்டத் தொழிலாளர்களின் வீடமைப்பு ஓரளவிற்கு முன்னேறி உள்ளது, எனினும், இம்முன்னேற்றத்தின் வேகம் குறைவாகவே காணப்படுகின்றது. இதற்கான பிரதான காரணி தேசிய வீடமைப்பு திட்டத்தோடு இது இணைக்கப்படாமல் இருப்பதாகும். பிறதுறைகளில் போன்றே இதிலும் மலையக மக்கள் ஒதுக்கப்பட்டவர்களாகவே இருக்கின்றனர்.

வீடமைப்பானது நிலத்தோடும்,வருவாயோடும் தொடர்புபட்டதாகும். மலையகத் தமிழர் காணி உரிமையற்றோராகவும்,குறைந்த வருமானம் பெறுவோராகவும் இருப்பதனால் அவர்கள் விருப்பமான முறையில் வீடுகளை அமைத்துக் கொள்ள முடியாதவர்களாக இருக்கின்றார்கள். இதனால் அவர்களது வீடில்லாப் பிரச்சினையை விரைவில் தீர்த்து வைப்பது அவசியம்.

தோட்டத் தொழிலாளர்கள் நாட்டின் குடிகள் ஆவர். இதனால் இதனை நிறைவேற்ற வேண்டியது அவசியம். ஆங்கிலேயர் ஆட்சிக் காலம் முதல் மலையகத் தமிழர்களுக்கு காணி உரிமை மறுக்கப்பட்டே வந்துள்ளது. 1935 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க காணி அபிவிருத்திச் சட்டம் மலையகத் தமிழர்களுக்கு இவ்வுரிமையை வழங்க மறுத்தது. அதனைக் கண்டித்து கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் சட்டசபையில் உரையாற்றினார். 1946 இல் கிராம விரிவாக்கத்திட்டத்தின் போது உருளவல்லி தோட்டத் தமிழ்த் தொழிலாளர்கள் புறக்கணிக்கப்பட்டபோது, விரிவான வேலைநிறுத்தப் போராட்டத்தின் மூலமாக அது முறியடிக்கப்பட்டது. களனி பள்ளத்தாக்கு பிரதேச இடதுசாரிகளின் தாக்கத்தால் இது சாத்தியமானது.

1972 இல் காணி சீர்திருத்தச் சட்டம் இயற்றப்பட்ட பின்னர் நுவரெலியா பகுதியில் பெருந்தெருக்களை அண்டிய தோட்டக்காணிகளைப் பிரிக்க முற்பட்டபோது மக்களின் எதிர்ப்பினால் அச்செயல் முறியடிக்கப்பட்டது. அதன் பின்னர் டெல்டா, சங்குவாரி தோட்டங்களில் வன்செயல்கள் இடம்பெற்றன. தொழிலாளர்களின் துணிகர எதிர்ப்பால் அது முறியடிக்கப்பட்டது.

இக்கட்டத்தில் வீடுகளில் இருந்து பலாத்காரமாக மக்கள் வெளியேற்றப்பட்டனர். ஹட்டன் பகுதியில் குடாஓயா தோட்டத்தில் பிரதேச மக்களின் ஒன்றிணைந்த எதிர்ப்பால் அவ்வாறான முயற்சி முறியடிக்கப்பட்டது. 1994 இல் பெ. சந்திரசேகரன் அமைச்சராக இருந்தபோது முதன் முதலாக 7 பேர்ச் காணியோடு தனிவீடமைப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு வீடுகள் கட்டப்பட்டன. 2015_19 காலகட்டத்தில் அன்றைய அரசாங்கத்தால் திகாம்பரம் தலைமையில் வீடுகள் அமைக்கப்பட்டன. தற்போது இந்திய உதவியால் வீடுகள் அமைக்கப்பட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட்ட காணிகளுக்கும், வீடுகளுக்கும் உரிய சட்டபூர்வ உரித்துப் பத்திரம் கொடுக்கப்பட வேண்டும். அதே போன்று ஆமை வேகத்தில் நகரும் வீடமைப்பு துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

**பி.மரியதாஸ்...**

# நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பும் பொறிமுறை திருமலையில் ஆரம்பம்

திருகோணமலை பிரதேச ஊடகவியலாளர்கள் சமீபத்தில் களப்பயணம் மேற்கொண்டனர். அவர்கள் தென்னிலங்கையில் மூவின சமூகங்களையும் சேர்ந்த ஊடகத்துறை நண்பர்கள் மற்றும் சாதாரண மக்களுடன் அந்நியோன்யமாகப் பழகுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது.

நாம் சந்தித்த சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் அனைவரும் தான் ஊடகத்துறையில் பெற்றுக்கொண்ட அனுபவங்களை எம்முள் ஆழமாய்ப் பதிய வைத்தனர். மொழியும் ஊடகமும் ஒரு சந்ததியினரை உருவாக்கவும் உருக்குலைக்கவும், சீரழிக்கவும் சீர்மைப்படுத்தவும் எமக்கு கிடைக்கப்பெற்ற சிறந்த ஆயுதங்கள். அதனை சரியான முறையில் பயன்படுத்தி நாளைய சந்ததியினருக்கு சிறந்த உலகை காண்பிப்பது எமது கடமை.



எமது எழுத்தாணி கலை பேரவை மேற்கொண்டது போன்ற காத்திரமான செயல்பாடுகள் ஊடகவியலாளர்கள் மத்தியிலும் ஏனைய மக்கள் மத்தியிலும் நிச்சயமாக முன்னெடுக்கப்பட வேண்டும். இவ்வாறான அரச சார்பற்ற தனியார் தொண்டு நிறுவனங்களின் செயற்பாட்டிற்கு அரசாங்கமும் ஏனைய தரப்பினரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும். அப்போதுதான் நாளைய விடியலிலாவது சிறந்த நல்லிணக்கமும் சமத்துவமும் சகவாழ்வினையும் உடைய சிறந்த சந்ததிகளை எம்மால் கண்டுகொள்ள முடியும்.

எனவே இரண்டாம் மொழியை கற்றல் என்பது நல்லிணக்கத்தின் அத்திவாரமாக காணப்படுகின்றது. மொழி புரியாமல் இருப்பதனால் ஒருவர் இரண்டாம் மொழியை பேசும் போது சந்தேக உணர்வுடன் பார்க்கவேண்டிய நிலை காணப்படுகின்றது. இதனால் பல விபரீதங்கள் நாட்டில் நடந்தன. அவற்றையெல்லாம் அடியோடு ஒழிக்க மூவின சமூகத்தினரும் மற்றவரின் மொழியை கற்க வருவதானது நாடென்ற அடிப்படையில் வெற்றிக்கான படிக்கல்லாக இதனை கருத முடியும்.

**தாஹா மொஹமட் பௌசுல் நஸ்மீரா...**
றொட்டவெவ, திருகோணமலை

# அக்கரைப்பற்றில் தீவிபத்தில் வீட்டை இழந்த குடும்பத்துக்கு கைகொடுத்த இராணுவத்தினர்

வசதி குன்றிய மக்களுக்கான மனிதநேய உதவிகளை இராணுவத்தின் அக்கரைப்பற்று 241ஆவது காலாட்படையினர் மேற்கொண்டுவருகின்றனர்.அம்பாறைமாவட்டத்தில் இனமத வேறுபாடின்றி சேவையாற்றி வரும் இப்படையினர் அண்மைக்காலமாக உணவு, உடை போன்றவற்றை வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு வழங்கி வருகின்றனர்.

நன்கொடையாளர்கள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்றவற்றை நாடி அவற்றின் உதவி ஒத்தாசைகளையும் பெற்று இப்பகுதியிலுள்ள வறிய மக்களுக்கு படையினர் உதவி வருகின்றனர். படையினர் தற்போது வறுமைக்கோட்டின் கீழ் வாழும் வீடற்ற மக்களுக்கு வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்கும் பணிகளிலும் இறங்கியுள்ளனர்.

இலங்கை இராணுவத்தின் 24 ஆவது காலாட் படைப்பிரிவின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் விபுல சந்திரசிறியின் வழிகாட்டலில் 241 ஆம் படையினரின் பூரண பங்களிப்புடன் இந்த நிர்மாணப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முகாமிலுள்ள படையினரே கட்டுமானப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அவ்வீடுகளுக்கான ஏனைய தேவைகளை வர்த்தகர்களும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளும் வழங்கி வருகின்றனர்.

அண்மையில் தீ அனர்த்தத்துக்குள்ளாகி தமது வீட்டை இழந்து நிர்க்கதிக்குள்ளாகியிருந்த இராணுவ வீராங்கனை ஒருவரின் குடும்பத்தினருக்கு அக்கரைப்பற்று இராணுவப்படையின் 241 ஆம் படைப்பிரிவினர் ஆலையடிவேம்பு இத்தியடியில் சகலவசதிகளையும் உள்ளடக்கிய வீடு ஒன்றை நிர்மாணித்துக் கொடுத்துள்ளனர். இராணுவத்தைச் சேர்ந்த தவசீலன் டிரோனா இராணுவப்படையின் 24 ஆவது பிரிவின் மூன்றாவது காலாட் படைப்பிரிவில் தற்போது பணியாற்றி வருகின்றார். ஆலையடிவேம்பில் இருந்த அவரின் வீடு 2016 ஆம் ஆண்டு தீக்கிரையானதால் அவர்கள் தற்காலிக கொட்டகையில் வாழ்ந்து வந்தனர்.

மேஜர் ஜெனரல் விபுல சந்திரசிறியின் வழிகாட்டலில் 241 ஆம் படைப்பிரிவினரால் வீடொன்று நிர்மாணிக்கப்பட்டது. இந்த வீடு சகல வசதிகளையும் கொண்டதாக உள்ளது.



இந்து சமய அனுஷ்டானத்தையடுத்து மேஜர் ஜெனரல் விபுல சந்திரசிறி மங்கள விளக்கேற்றியதைத் தொடர்ந்து வீடு வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. இராணுவத்தின் அக்கரைப்பற்று 241 ஆவது காலாட்படையின் கட்டளை அதிகாரி கேர்ணல் எல். எஸ்.டி .என். பதிரத்னா மற்றும் லெப்டினன்ட் கேர்ணல் திலக் குமாரசிறி ஆகியோர் நிர்மாண வேலைகளையும் புதிய வீட்டின் திறப்பு விழா தொடர்பான ஒழுங்குகளையும் மேற்கொண்டிருந்தனர்.

குடிபுகும் விழாவில் ஆலயடிவேம்பு பிரதேச செயலாளர் வீ. பபாகரன் மற்றும் வர்த்தகப் பிரமுகர்களும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். அக்குடும்பத்தினர் இராணுவத்தினருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.





**எம்.ஏ.பகுர்டீன்...**
(அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)

# சதுரங்கப் போட்டியில் தேசியமட்ட போட்டிக்கு தெரிவான மாணவி



இலங்கை பாடசாலைகள் சதுரங்க சங்கத்தினால் ஓகஸ்ட் மாதம் 24 ஆம், 25 ஆம் திகதிகளில் திருகோணமலை சிங்கள மத்திய மகாவித்தியாலயத்தில் (தேசிய பாடசாலை) மாகாண ரீதியில் நடத்தப்பட்ட சதுரங்கப் போட்டியில் மட்டக்களப்பு மாவட்டத்தின் செங்கலடி மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) மாணவர்கள் மூவர் அதிவிசேட சித்தியைப் பெற்று தேசிய மட்ட ரீதியிலான போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுள் தற்பொழுது தரம் 7 இல் கல்வி கற்கும் மாணவி சுதாகரன் தேஜஷ்வி பதின்மூன்று வயதிற்குட்பட்ட பெண்கள் பிரிவில் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பெண்கள் தலைமையிலான சிறிய, நடுத்தர வர்த்தகங்களை ஆதரிப்பதற்காக 13 மில்லியன் ரூபாவை வழங்கும் Visa

இலங்கையில் பெண்கள் தலைமையிலான சிறிய மற்றும் நடுத்தர வர்த்தக நிறுவனங்களுக்கு உதவுவதற்காக The Asia Foundation இற்கு 13 மில்லியன் ரூபா நிதியுதவி வழங்குவதாக Visa அறிவித்துள்ளது. டிஜிட்டல் கொடுப்பனவுகளில் உலகளாவிய முன்னணி நிறுவனமாகத் திகழும் Visa, இலங்கையில் அதன் 35 ஆண்டு நிறைவைக் கொண்டாடும் முகமாக இவ்வறிவித்தலை விடுத்துள்ளது.




இதனை நினைவுகூரும் வகையில், இலங்கை முழுவதும் பெண்கள் தலைமையிலான சிறு மற்றும் நடுத்தர வணிகங்களின் (SMBs) பொருளாதார விளைவுகளை மேம்படுத்த 13 மில்லியன் ரூபாவை வழங்க Visa, உறுதியளித்துள்ளது. The Asia Foundation உடன் இணைந்து, தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்கள் தலைமையிலான SMB களின் குழுவிற்கு Visa நிதியுதவியை வழங்கும். மேலதிகமாக நிதியுதவியானது திறன் மேம்பாடு, அறிவுப் பகிர்வு மற்றும் ஒத்துழைப்பிற்கு உதவுவதுடன் பெண்கள் தலைமையிலான சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களிடையே நிதிச்சேர்க்கையை ஊக்குவிக்கும்.

Visa வின் ஆசியபசுபிக் பிராந்தியத்திற்கான தலைவர் Chris Clark இதுபற்றித் தெரிவிக்கையில், "கடந்த 35 ஆண்டுகளில் இலங்கையின் நிதிக் கட்டமைப்பில் Visa ஒரு உள்ளார்ந்த அங்கமாக மாறியுள்ளது. எங்களின் பார்வை பரிவர்த்தனைகளுக்கு அப்பாற்பட்டது. எங்களின் நோக்கம் எல்லா இடங்களிலும் உள்ள அனைவரையும் மேம்படுத்துவதாகும். அவ்வாறு செய்வதன் மூலம் தனிநபர்கள், வணிகங்கள் மற்றும் பரந்த சமூகத்தை வலுப்படுத்துவதே எமது நோக்கமாகும்" என்றார்.

பல ஆண்டுகளாக, Visa, முன்னோடி கட்டணத் தீர்வுகளை அறிமுகப்படுத்தியுள்ளது, இது நுகர்வோர் மற்றும் வணிகங்களிடையே பணத்திலிருந்து டிஜிட்டல் பரிவர்த்தனைகளுக்கான மாற்றத்தை ஊக்குவிக்கிறது. சிறிய மற்றும் நடுத்தர வணிகங்கள் , போக்குவரத்து மற்றும் சுற்றுலா போன்ற முக்கியமான துறைகளை டிஜிட்டல் மயமாக்குவதில் Visa, முக்கியபங்கு வகிக்கிறது.

# கிழக்கின் குரல்



## கிழக்கு மாகாண ஆளுநர் தலைமையில்
# பலநோக்கு அபிவிருத்தி உதவியாளர்களுக்கு நிரந்தர நியமனம்



**முள்ளிப்பொத்தானை குறூப் நிருபர்**

பலநோக்கு அபிவிருத்தி உதவியாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு, திருகோணமலை மாவட்ட அரசாங்க அலுவலகத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தலைமையில் திங்கட்கிழமை (28) நடைபெற்றது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நடைமுறைப்படுத்தப்பட்ட, வருமானம் அற்ற நபர்களுக்கு வழங்கப்பட்ட தற்காலிக நியமனங்களை நிரந்தரமாக்கும் நிகழ்வின் போது இந் நியமனம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. இதன் போது நூற்றுக்கும் மேற்பட்டவர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கி வைக்கப்பட்டன.இந் நிகழ்வுக்கு பாராளுமன்ற உறுப்பினர்களான கபில நுவன் அத்துகோரல, ஏ.எல்.எம். அதாஉல்லா, கிழக்கு மாகாண அமைச்சின் செயலாளர்கள், பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ். ரத்னாயா மற்றும் திருகோணமலை மாவட்ட செயலாளர் சாமிந்த ஹெட்டிராயச்சி, அரச உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# சுவரோவியங்கள் திறந்து வைப்பு

**(காரைதீவு குறூப் நிருபர்)**

சம்மாந்துறை வலயத்துக்கு உட்பட்ட அன்னமலை ஸ்ரீ சக்தி வித்தியாலய சுற்றுமதிலில் வரையப்பட்ட அழகான சுவரோவியங்கள் திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் பொன் பாரதிதாசன் தலைமையில் நடைபெற்ற இத் திறப்பு விழாவில் ,பிரதம அதிதியான சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா கலந்து கொண்டு நாடா வெட்டி திறந்து வைத்தார். கௌரவ அதிதிகளாக சம்மாந்துறை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா மற்றும் ஆசிரிய ஆலோசகர் பி.வி.குணரத்ன ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். ஜேர்மனியிலிருந்து வந்த கொடையாளி விஜிகரன் தம்பதியினர் இவ் விழாவில் கலந்து கொண்டனர். அவர்களுக்கு பாடசாலை சமூகம் சார்பில் வலயக் கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.




கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் கே.எம்.அப்துல் றஸ்ஸாக் (ஜவாத்) அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா கல்முனைக் கிளை காரியாலயத்திற்கு, ஒரு தொகுதி கதிரைகளை அன்பளிப்புச் செய்த போது.

# கிழக்கு ஆளுநருக்கு எதிராக பௌத்த பிக்குகள் ஆர்ப்பாட்டம்



**(ரொட்டவெவ குறூப் நிருபர்)**

திருகோணமலை இலுப்பைக்குளம் பகுதியில் அமைக்கப்பட்ட பொரலுகந்த ரஜமகா விகாரைக்கு தடை விதித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, பௌத்த பிக்குகள் மற்றும் சில பொதுமக்கள் மாவட்ட செயலகத்திற்கு முன்னால் , கிழக்கு ஆளுநருக்கு எதிரான கோசங்களை எழுப்பியவாறு, பதாதைகளை ஏந்தியவாறு திங்கட்கிழமை (28) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் இடம்பெற்று வந்தநிலையில் இது தொடர்பாகவும் பேசப்பட்டது. குறித்த பகுதியில் விகாரை அமைப்பதற்கு எதிராக தமிழ் மக்களினால் முன்வைத்த கோரிக்கையை பரிசீலித்த கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் ஜனாதிபதியினால் அப்பகுதியில் அமைக்கப்பட்ட விகாரையின் கட்டுமானங்கள் இடைநிறுத்தப்பட்டன.

இந் நிலையிலேயே இதற்கு எதிராக இவ்வார்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

காலாகாலமாக தமிழ் மக்கள் வாழுகின்ற பகுதிக்குள் விகாரை அமைத்தால் இன முறுகலை ஏற்படுத்தும் என்ற வகையிலும், இன நல்லிணக்கத்தை பாதிக்கும் என்ற வகையிலும் தமிழ் மக்களினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# கபில்வத்தை யாத்திரை ஆரம்பம்

**(காரைதீவு குறூப் நிருபர்)**

இலங்கையில் சித்தர்களின் தாய் வீடு என்று போற்றப்படும் ஆதி கதிர்காமம் கபில்வத்தைக்கான அற்புதமான, அமானுஷ்யமான, ஆபத்தான கபில்வத்தை காட்டுவழி யாத்திரை செவ்வாய்க்கிழமை (29) மொனராகலையிலிருந்து ஆரம்பமாகியது.

பிரபல இந்திய மணவளக்கலை நிபுணர் குபேரகுருஜீ ஆனந்த் சகிதம் சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி தலைமையில் கபில்வத்தைக்கான யாத்திரை ஆரம்பமாகியது.

சித்தர்கள் குரல் அமைப்பின் தலைவர் ஆதித்தன், உப தலைவர் மனோகரன் ஏற்பாட்டில் நமசிவாய சிவயோகி மகேஸ்வரன் சுவாமிகளின் வழிகாட்டலில் தியாகராஜா ஜீ, சமய ஆர்வலர்களான வி.ரி. சகாதேவராஜா, கே.ஜெயசிறில் உள்ளிட்டோர் பயணமாகினர்.

# பொத்துவில் குஞ்சானோடை அணைக்கட்டை பூர்த்தி செய்யுமாறு விவசாயிகள் கோரிக்கை

**(ஒலுவில் விசேட நிருபர்)**



பொத்துவில் குஞ்சானோடை நீர்ப்பாசன அணைக்கட்டை பூர்த்தி செய்து வாய்க்கால் வசதியை அமைத்துத் தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பொத்துவில் பாலாந்தி வட்டை உவாந் தொட்டம் நெற் செய்கை காணிகளுக்கு, நீர்ப்பாசன வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக கடந்த 2021ஆம் ஆண்டு உலக வங்கியின் சுமார் 03 கோடி ரூபாய் நிதியில் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் கீழ், நிர்மாணிக்கப்பட்ட நீர்ப்பாசன அணைக்கட்டு பூர்த்தி செய்து வாய்க்கால் வசதி அமைக்கப்படாததனால் கடந்த இரண்டு போகங்கள் நெற் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக, பாலாந்தி வட்டை உவாந் தொட்டம் விவசாய அமைப்பின் தலைவர் எம். பி.எஸ்.அமீர் தெரிவித்தார்.

நீர்ப்பாசன அணைக்கட்டை பூர்த்தி செய்து வாய்க்கால் அமைக்கப்படும் பட்சத்தில் சுமார் 300 ஏக்கருக்கு மேற்பட்ட நெற் செய்கை மேற் கொள்ள முடியுமெனவும், 50 ஏக்கருக்கு மேற்பட்ட காணியில் மேட்டு நில பயிர்ச் செய்கையை மேற்கொள்ளமுடியுமெனவும் தெரிவித்தார்.

நீர்ப்பாசன அணைக்கட்டுடன் இணைந்ததாக வாய்க்கால் அமைக்கப்பதற்கான நிதி ஒதுக்கீடு செய்யவில்லை, இது தொடர்பாக உலக வங்கி பிரதி நிதிகள், அம்பாறை மாவட்ட செயலாளர், நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகம், கிழக்கு மாகாண ஆளுநர் ஆகியோரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிவித்தார்.

நீர்ப்பாசன அணைக்கட்டுடன் இணைந்ததாக வாய்க்கால் அமைக்கப்படும் பட்சத்தில், எதிர்வரும் 2023/2024 மகா போகத்தில் நெற் செய்கையை மேற்கொள்ள முடியும் என தெரிவித்தார்.

இந்த நீர்ப்பாசன திட்டத்தினை முழுமையாக பூர்த்தி செய்வதற்கான நிதியை ஒதுக்கீடு செய்து நெற் செய்கையை மேற்கொள்ளுவதற்கு ஆவண செய்யுமாறு கேட்டுள்ளார்.

# கனரக வாகன இயக்குனர்களாக தெரிவானவர்களுக்கு கலந்துரையாடல்

**மட்டக்களப்பு குறூப், புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் கனரக வாகனம் இயக்குவதற்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான, விசேட கலந்துரையாடல் மாவட்ட செயலகத்தில் திங்கட்கிழமை (28) இடம்பெற்றது.

கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தனின் பணிப்புரையின் கீழ், அரச அபிவிருத்தி மற்றும் நிருமாணக் கூட்டுத்தாபனம் மாவட்டத்தில் தொழில் வாய்ப்பின்றி உள்ள இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்புகளை மேம்படுத்துவதற்காக கனரக வாகன இயக்குனர்ளுக்கான நிகழ்ச்சித் திட்டத்தினை மேற்கொண்டு வருகின்றது.

மாவட்டத்தின் 14 பிரதேச செயலக பிரிவில் தொழிலின்றி காணப்படும் இளைஞர்களின் தொழில் வாய்ப்பை அதிகரிப்பதற்காக அரச அபிவிருத்தி மற்றும் நிருமாண கூட்டுத்தாபனம் ஊடாக இக் கற்கை நெறியை நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக் கற்கை நெறிகளை பூர்த்தி செய்பவர்களுக்கு மூன்றாம் நிலை கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பெறுமதியான சான்றிதழ் வழங்கப்படவுள்ளது.

அரச சார்பற்ற அம்கோர் (AMCOR) நிறுவனத்தின் ஆதரவுடன் இத் திட்டம் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கனரக வாகன இயக்குனர்களுக்கான கற்கை நெறிகள் வெளிமாவட்டங்களில் இடம் பெற்று வரும் நிலையில், கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தனின் பணிப்புரையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள திருப்பெரும் துறையில் வார நாட்களில் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# ஆயித்தியமலை சதாசகாய மாதா ஆலய திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பம்

**(கல்லடி குறூப் நிருபர்)**

மட்டக்களப்பு ஆயித்தியமலை சதாசகாய மாதா திருத்தலத்தின் 2023 ஆம் ஆண்டிற்கான திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை திருத்தல நிருவாகி அருட்பணி ஈ.ஜேமில்ட்டன் தலைமையில் இடம்பெற்றதுடன், முதல் நாள் திருப்பலியினை இயேசு சபைத் துறவி அருட்பணி லோரன்ஸ் லோகநாதன் அடிகளார் ஒப்புக்கொடுத்துள்ளார்.

ஆயித்தியமலை புனித சதாசகாயமாதா திருத்தலத்தின் திருவிழா ஒகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு செப்டெம்பர் 03 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

பெருவிழா கூட்டுத் திருப்பலியினை திருத்தந்தையின் இலங்கைக்கான பிரதிநிதி பிறையன் உடைக்வே மற்றும் மறை மாவட்ட ஆயர் கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை ஆகியோரினால் இணைந்து ஒப்புக்கொடுக்கப்படவுள்ளதுடன், முதல் திருப்பலியானது காலை 5.15 மணிக்கு இடம்பெறவுள்ளது.

திருவிழாவிற்கான பாதயாத்திரை எதிர்வரும் செப்டெம்பர் 09 திகதி காலை 5 மணிக்கு புளியந்தீவு புனித மரியாள் பேராலயத்தில் திருப்பலியைத் தொடர்ந்து வவுணதீவினூடாகவும் மற்றும் செங்கலடி புனித நிக்கலஸ் ஆலயத்தில் காலை 5 மணி திருப்பலியைத் தொடர்ந்து கரடியனாறு ஊடாகவும் திருத்தலம் சென்றடையவுள்ளது.

அன்னையின் பக்த அடியார்களின் நன்மை கருதி திருவிழாவின் போது போக்குவரத்து, சுகாதாரம், குடிநீர் மற்றும் பாதுகாப்பு, மின்சாரம் வழங்கள் போன்ற விடங்கள் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜாவின் ஆலோசனைக்கு அமைவாக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# உள்ளூராட்சிமன்ற பெண்களால் இறுதி அறிக்கை சமர்ப்பிப்பு



**(மாளிகைக்காடு குறூப்,அக்கரைப் பற்று வடக்கு தினகரன் நிருபர்கள்)**

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த மூவின மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில், 5 உள்ளூராட்சி மன்ற பெண்களால் முன்மொழியப்பட்ட இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு, அவற்றுக்கான சிறு மானிய உதவிகள் வழங்குவத்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டதோடு, ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டது.

இந் நிகழ்வு அம்பாறை மொன்டி உல்லாச விடுதியில் ஞாயிறுக்கிழமை (27) நடைபெற்ற போது, அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளர் கமல் நெத்மினி, அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உயர் அதிகாரிகள், சேச் போ கொமன் கிறவுண்ட் நிறுவனத்தின் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுக்கான சிரேஸ்ட முகாமையாளர் எம். ஐ.எம்.சதாத், இணைப்பாளர்கள், சிவில் சமுக செயற்பாட்டாளர்கள், கல்முனை, திருக்கோவில், சம்மாந்துறை, ஆலையடிவேம்பு மற்றும் அம்பாறை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் பெண் உறுப்பினர்கள் இதில் கலந்து கொண்டனர்.

# மாவட்ட மட்ட ஆங்கில மொழித் தின போட்டிகள்

**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்திற்கான மாவட்ட மட்ட ஆங்கில மொழி தினப் போட்டிகள், பட்டிருப்பு வலயக் கல்விப் பணிமனைக்குட்பட்ட களுதாவளை தேசிய பாடசாலையில் பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் சிவானந்தம் சிறீதரன் தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை (29) நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம அதிதியாக காணி, மறுசீரமைப்பு ஆணையாளர் என்.விமல்ராஜ் கலந்து கொண்டதுடன், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வலயக் கல்விப் பணிப்பாளர்களான திருமதி சுஜாதா குலேந்திரகுமார், வை.ஜெயச்சந்திரன், எஸ்.எம்.எம்.அமீர் உட்பட பலர் கலந்து கொண்டனர். ஏற்கனவே வலய மட்டங்களில் நடத்தப்பட்ட ஆங்கிலப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்கள், மாவட்ட போட்டிகளில் கலந்து கொண்டு, தங்கள் திறமைகளை வெளிக்காட்டினர். இப் போட்டிகளில் வெற்றிபெறும் பாடசாலைகளின் மாணவர்கள் மாகாண மட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கந்தளாயில் காட்டு யானை இறப்பு

**கந்தளாய் தினகரன் நிருபர்**



கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் காட்டு யானையொன்று மர்மான முறையில் உயிரிழந்துள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

யானை இறந்துள்ளமை தொடர்பாக வனஜீவராசி அலுவலகத்திற்கு அறிவித்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நோய் வாய்ப்பட்டு இறந்துள்ளதா அல்லது வேறு காரணங்களினால் இறந்துள்ளதா என்பது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# த ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோபரேஷன் லிமிட்டெட்

**வரையறுக்கப்பட்ட பொறுப்புகளுடன் ஹொங்கொங்கில் பதிவுசெய்யப்பட்டது.**

## இலங்கைக் கிளை

பிரதான அலுவலகம்- 24, சேர் பாரொன் ஜயதிலக்க மாவத்தை, கொழும்பு 01.

### வருமானக் கூற்று

| ஜூன் 30 திகதியுடன் முடிவடைந்த காலப்பகுதிக்கானது | 2023 மில்லியன் ரூபாய் | 2022 மில்லியன் ரூபாய் |
|---|---|---|
| வட்டி வருமானம் | 23,886 | 16,408 |
| வட்டிச் செலவினங்கள் | (5,674) | (4,680) |
| **தேறிய வட்டி வருமானம்** | 18,212 | 11,728 |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 3,783 | 2,924 |
| கட்டணம் மற்றும் தரகுச் செலவினங்கள் | (878) | (876) |
| **தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்** | 2,905 | 2,048 |
| வர்த்தகத்திலிருந்து நிகர ஆதாயம்/(இழப்பு) | 5,277 | 1,499 |
| நிகர நியாயப் பெறுமதி ஆதாயம்/(இழப்பு): | | |
| இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் நிதிச் சொத்துகள் | 3 | (11) |
| இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் நிதிப் பொறுப்புகள் | – | – |
| நிதிச் சொத்துகளின் அங்கீகார நீக்கம் மீதான நிகர ஆதாயம்/(இழப்பு): | – | – |
| இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் | – | – |
| தீர்த்துக் குறைக்கப்பட்ட பெறுமதியில் | – | – |
| ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானத்தின் ஊடான நியாயப் பெறுமதியில் | – | – |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் (தேறிய) | 35 | 29 |
| **மொத்த தொழிற்பாட்டு வருமானம்** | 26,432 | 15,293 |
| சீரிழப்பு அறவீடுகள் | 2,323 | (3,727) |
| **தேறிய தொழிற்பாட்டு வருமானம்** | 28,755 | 11,566 |
| தனிப்பட்ட செலவினங்கள் | (2,966) | (2,203) |
| பெறுமானத் தேய்வு மற்றும் கடன் தீர்ப்பனவு | (258) | (296) |
| ஏனைய செலவினங்கள் | (5,895) | (5,301) |
| **நிதியியல் பணிகளுக்கு அறவிடப்பட்ட பெறுமதி கூட்டப்பட்ட வரி, மற்றும் ஏனைய வரிகளுக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம்/( நட்டம்)** | 19,636 | 3,766 |
| நிதியியல் பணிகள் மீதான பெறுமதிகூட்டப்பட்ட வரி | (4,033) | (944) |
| நிதியியல் சேவைக்கான ஏனைய வரிகள் | (887) | (8) |
| **நிதியியல் பணிகளுக்கு அறவிடப்பட்ட பெறுமதி கூட்டப்பட்ட வரி, மற்றும் ஏனைய வரிகளுக்கு பின்னரான தொழிற்பாட்டு இலாபம் /(நட்டம்)** | 14,716 | 2,814 |
| வரிச் செலவினங்கள் | (6,804) | (2,146) |
| காலப்பகுதிக்கான இலாபம்/(நட்டம்) | 7,912 | 668 |
| **இலாபத்தின் மீதான பங்கு இலாபம்:** | | |
| தாய்நிறுவனத்தின் பங்குரிமை வைத்திருப்பவர்கள | 7,912 | 668 |
| கட்டுப்படுத்தாத உரிமையாளர்களுக்கு | – | – |

### காசுப் பாய்ச்சல் அறிக்கை

| | 2023 ஜூன் 30 இல் உள்ளவாறு மில்லியன் ரூபாய் | 2022 ஜூன் 30 இல் உள்ளவாறு மில்லியன் ரூபாய் |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கை மூலமான காசுப் பாய்ச்சல்** | | |
| வட்டி வருமதிகள் | 24,905 | 15,539 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | (6,490) | (6,028) |
| நிகர தரகுப்பண வருமதிகள் | 2,905 | 2,049 |
| வர்த்தக வருமானம் | 1,066 | 1,488 |
| ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் | (2,834) | (2,141) |
| நிதிச் சேவைகள் மீதான பெறுமதிகூட்டப்பட்ட வரி | (5,459) | (788) |
| ஏனைய செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான வருமதிகள் | 4,246 | 250 |
| ஏனைய செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கான கொடுப்பனவுகள் | (6,055) | (1,515) |
| **செயற்பாட்டுச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் மாற்றத்திற்கு முன் செயற்பாட்டு இலாபம்** | 12,284 | 8,854 |
| **செயற்பாட்டுச் செலவுகளில் (அதிகரிப்பு)/வீழ்ச்சி** | | |
| இலங்கை மத்திய வங்கியிடமுள்ள மீதிகள் | 60,469 | (66,618) |
| தீர்த்துக் குறைக்கப்பட்ட பெறுமதியில் நிதிச் சொத்துகள் - கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 26,178 | (105,185) |
| திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் | 26,471 | 20,799 |
| ஏனைய சொத்துக்கள் | (5,516) | 20,138 |
| | 107,602 | (130,866) |
| **செயற்பாட்டுப் பொறுப்புகளில் அதிகரிப்பு/(வீழ்ச்சி)** | | |
| தீர்த்துக் குறைக்கப்பட்ட பெறுமதியில் நிதிச் சொத்துகள் - வைப்பாளர்களுக்குச் செலுத்த வேண்டியவை | (78,271) | 179,526 |
| தீர்த்துக் குறைக்கப்பட்ட பெறுமதியில் நிதிச் சொத்துகள் - ஏனைய கடனாளிகளுக்குச் செலுத்த வேண்டியவை | (19,651) | (2,076) |
| ஏனைய பொறுப்புக்கள் | 7,195 | (17,611) |
| | (90,727) | 159,839 |
| **வரிக்கு முன் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து நிகர காசு பாய்ச்சல்** | 29,159 | 37,704 |
| செலுத்திய வருமான வரி | (4,531) | (1,866) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளில் (பயன்படுத்திய)/இருந்தான நிகர பணம்** | 24,628 | 35,838 |
| **முதலீட்டு நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல்** | | |
| காணி, இயந்திர மற்றும் உபகரணக் கொள்வனவு | (89) | (34) |
| காணி, இயந்திர மற்றும் உபகரண விற்பனை மூலமான வருமானம் | – | – |
| நிதி முதலீடுகளின் கொள்வனவு | – | – |
| நிதி முதலீடுகளின் விற்பனை மற்றும் முதிர்ச்சி மூலமான வருமானம் | – | – |
| ஏனையவை | – | – |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் (பயன்படுத்திய)/இருந்த நிகர பணம்** | (89) | (34) |
| **நிதி நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல்கள்** | | |
| ஒருவருடத்துக்கு மேற்பட்ட ஒப்பந்தகாலத்திற்கு மேலான குத்தகைக் கட்டணத்துக்கு பதிலான கட்டணம் | (76) | (123) |
| தலைமை அலுவலகத்திற்கு மாற்றப்பட்ட இலாபம் | – | – |
| **நிதி நடவடிக்கைகளில் (பயன்படுத்திய)/இருந்த நிகர பணம்** | (76) | (123) |
| **தேறிய காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் தொடர்பில் (அதிகரிப்பு) / குறைவு** | 24,463 | 35,804 |
| காலப்பகுதியின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | 190,933 | 35,460 |
| பரிமாற்ற மாற்றங்களால் ஏற்பட்ட காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | (14,879) | 28,994 |
| **காலப்பகுதியின் முடிவில் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்** | 200,517 | 100,258 |

### அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்று

| ஜூன் 30ம் திகதியுடன் முடிவடைந்த காலப்பகுதிக்கானது | 2023 மில்லியன் ரூபாய் | 2022 மில்லியன் ரூபாய் |
|---|---|---|
| காலப்பகுதிக்கான இலாபம்/(நட்டம்) | 7,912 | 668 |
| **இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள வகைப்படுத்தப்படவிருக்கும் உருப்படிகள்** | | |
| வெளிநாட்டுப் இடப்பெயர்வு மீதான பரிவர்த்தனை வித்தியாசங்கள் | (14,879) | 36,706 |
| காசுப் பாய்ச்சல் ஹெஜஸ் மீதான நிகர ஆதாயம்/(இழப்பு) | | |
| ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானத்தின் ஊடான நியாயப் பெறுமதியில் அறவிடப்பட்ட கடன் பத்திரங்களில் முதலீடுகள் மீதான நிகர ஆதாயம்/(இழப்பு) | 1,685 | (4,606) |
| துணை நிறுவனங்கள் மற்றும் கூட்டு முயற்சிகளின் இலாபத்தில் பங்கு | - | - |
| கடன் பத்திரங்கள் அனைத்துமுள்ளடங்கிய வருமானத்தின் ஊடான நியாயப் பெறுமதியில் | - | - |
| ஏனையவை | - | - |
| கழிக்குக: இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள வகைப்படுத்தப்படவிருக்கும் வருமான அறிக்கை | (545) | 1,582 |
| | (13,739) | 33,682 |
| **இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள வகைப்படுத்தப்படாத உருப்படிகள்** | | |
| ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானத்தின் ஊடாக நியாயப் பெறுதியில் குறித்துரைக்கப்பட்ட பங்குரிமைப் பத்திரங்களில் முதலீடுகள் மீதான நியாயப் பெறுமதியில் மாற்றம் | - | - |
| இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயப் பெறுமதியில் குறித்துரைக்கப்பட்ட நிதிப் பொறுப்புகள் மீதான வங்கியின் சொந்தக் கடன் இடர்லான மாற்றத்திற்குச் சாட்டத்தக்க நியாயப் பெறுமதியில் மாற்றம் | - | - |
| தொழிலுக்குப் பின்னான அனுகூலக் கட்டப்பாடுகளின் மீள் அளவீடு | 58 | (34) |
| துணை நிறுவனங்கள் மற்றும் கூட்டு முயற்சிகளின் இலாபத்தில் பங்கு | - | - |
| ஏனையவை | 58 | (34) |
| **காலப்பகுதிக்கான ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானம், வரிகள் நீங்கலாக** | (13,681) | 33,648 |
| **காலப்பகுதிக்கான மொத்த அனைத்துமுள்ளடங்கிய வருமானம்** | (5,769) | 34,316 |
| **பகிர்ந்தளிக்கப்படுவதற்கு:** | | |
| தாய்நிறுவனத்தின் பங்குரிமை வைத்திருப்பவர்கள் | (5,769) | 34,316 |
| கட்டுப்படுத்தாத ஆர்வங்கள் | – | – |

### தெரிந்தெடுக்கப்பட்ட தொழிற்பாட்டுச் சுட்டிகள்

| | 2023 ஜூன் 30 இல் உள்ளவாறு மில்லியன் ரூபாய் | 2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறு மில்லியன் ரூபாய் |
|---|---|---|
| **ஒழுங்குபடுத்தல் மூலதனப் போதுமை (மில்லியன் ரூபாய்)** | | |
| பொதுப் பங்குரிமை அடுக்கு 1 | 61,458 | 62,891 |
| கரு (அடுக்கு 1) மூலதனம் | 61,458 | 62,891 |
| மொத்த மூலதன அடித்தளம் | 66,403 | 68,461 |
| **ஒழுங்குபடுத்தல் மூலதன விகிதங்கள்** | | |
| பொதுப் பங்குரிமை அடுக்கு1 மூலதனம் (குறைந்தபட்ச தேவை, 6.5%) | 16.70% | 15.77% |
| அடுக்கு1 மூலதன விகிதம் (குறைந்தபட்ச தேவை, 8.0%) | 16.70% | 15.77% |
| மொத்த மூலதன விகிதம் (குறைந்தபட்ச தேவை, 12.0%) | 18.05% | 17.17% |

குறிப்பு: தணிக்கை செய்யப்பட்ட போதுமான மூலதன விதிதம் (2022)-17.78% தணிக்கை செய்யப்பட்ட மீள் திருத்தப்பட்ட போதுமான மூலதன விகிதம் (2022)-17.17%

| | 2023 ஜூன் 30 இல் உள்ளவாறு மில்லியன் ரூபாய் | 2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறு மில்லியன் ரூபாய் |
|---|---|---|
| **ஒழுங்குமுறைப்படுத்தல் திரவத்தன்மை** | | |
| சட்டபூர்வத் திரவச் சொத்துகள் (மில்லியன் ரூபாய்) | | |
| உள்நாட்டு வங்கியியல் அலகு | 137,182 | 219,945 |
| கரைகடந்த வங்கியியல் அலகு | 178,599 | 184,362 |
| மொத்த வங்கி | 302,068 | 404,212 |
| சட்டப்பூர்வ திரவத் சொத்து விகிதம் | | |
| உள்நாட்டு வங்கியியல் அலகு | 49.00% | 52.23% |
| கரைகடந்த வங்கியியல் அலகு | 90.00% | 121.47% |
| நியதிச்சட்ட திரவச் சொத்துக்கள் விகிதம், (குறைந்தபட்சத் தேவை, 20%) | 63.68% | 70.54% |
| உயர்தர திரவச் சொத்துக்களின் மொத்த இருப்பு (மில்லியன் ரூபாய்) | | |
| ரூபாய் | 120,270 | 199,108 |
| சகல நாணயங்களும் | 120,436 | 199,645 |
| திரவத்தன்மை உள்ளடக்க விகிதம் | | |
| ரூபாய் (குறைந்தபட்ச தேவை, - 100%) | 196.00% | 297.00% |
| சகல நாணயங்களும் (குறைந்தபட்ச தேவை, - 100%) | 231.96% | 500.40% |
| நிகர நிலையான நிதி விகிதம் - (குறைந்தபட்ச தேவை - 100%) | 120.54% | 162.79% |
| கடன் பங்கு விகிதம் (குறைந்தபட்ச தேவை - 3%) | 9.59% | 8.27% |
| **சொத்துக்களின் தரம் (கடன் சொத்துப்பட்டியலின் தரம்)** | | |
| திரண்ட செயற்படாக் கடன்களின் விகிதம், | 3.71% | 4.59% |
| (இடைநிறுத்தி வைக்கப்பட்ட வட்டி நீங்கலாக) | 10.20% | 6.32% |
| **இலாபத்தன்மை** | | |
| வட்டி இலாபம் | 16.23% | 5.08% |
| சொத்துக்களிலிருந்தான வருவாய் (வரிக்கு முந்திய) | 5.03% | 1.49% |
| பங்கு மூலதனத்திலிருந்தான வருவாய் | 14.55% | 8.73% |

கவனிக்கவும்: இலாப விகிதங்கள் SLFRS தரவுகளை அடிப்படையாக கொண்டுள்ளன.

### வைப்புகளுக்கான பகுப்பாய்வு

| | 2023 ஜூன் 30 இல் உள்ளவாறு மில்லியன் ரூபாய் | தணிக்கை செய்யப்பட்டது 2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறு மில்லியன் ரூபாய் |
|---|---|---|
| **துறை சார்ந்தவை - உள்நாட்டு நாணயத்தில்** | | |
| கோரல் வைப்புக்கள் (நடைமுறைக் கணக்குகள்) | 37,133 | 37,632 |
| சேமிப்பு வைப்புக்கள் | 62,287 | 72,020 |
| நிலையான வைப்புக்கள் | 92,916 | 118,465 |
| ஏனைய வைப்புக்கள் | 2,140 | 2,641 |
| உப மொத்தம் | 194,476 | 230,758 |
| **துறை சார்ந்தவை - உள்நாட்டு நாணயத்தில்** | | |
| கோரல் வைப்புக்கள் (நடைமுறைக் கணக்குகள்) | 59,893 | 62,726 |
| சேமிப்பு வைப்புக்கள் | 54,961 | 67,876 |
| நிலையான வைப்புக்கள் | 77,465 | 78,481 |
| ஏனைய வைப்புக்கள் | 3,200 | 28,425 |
| உப மொத்தம் | 195,519 | 237,508 |
| மொத்தம் | 389,995 | 468,266 |

### நிதியியல் நிலைமைக் கூற்று

| | 2023 ஜூன் 30 இல் உள்ளவாறு மில்லியன் ரூபாய் | தணிக்கை செய்யப்பட்டது 2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறு மில்லியன் ரூபாய் |
|---|---|---|
| **சொத்துக்கள்** | | |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | 200,517 | 190,933 |
| மத்திய வங்கியுடனான மீதிகள் | 103,126 | 163,595 |
| வங்கிகளிலுள்ள இருப்புக்கள் | - | - |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 2,713 | 286 |
| இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதிச் சொத்துகள் | 51 | 57 |
| இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயப் பெறுமதியில் நியமிக்கப்பட்ட நிதிச் சொத்துகள் | – | - |
| நிதியில் சொத்துக்களின் தீர்த்துக் குறைக்கப்பட்ட பெறுமதியில் - கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 200,608 | 227,054 |
| நிதியில் சொத்துக்களின் தீர்த்துக் குறைக்கப்பட்ட பெறுமதியில் - கடன் பத்திரங்கள் | 69 | 70 |
# நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு

## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை

## விலைக்கோரல் அறிவித்தல் – 2023.08.30

பின்வரும் வேலைகள் / வழங்கல்களுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை சார்பில் பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவையான விலை மனு பிணை | தேவையான தகைமை | VAT உட்பட மதிப்பீட்டுச் செலவு (ரூபா) | தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| | **சிவில் கேள்விகள்** | | | | | | |
| 01 | கண்டி தெற்கு நீர் வழங்கல் திட்டத்தில் வாடிக்கையாளர்களுக்கு புதிய சேவை இணைப்புகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல : **RSC-C/CS/CIVIL/O&M/U-Y/ MEEWATHURA /2023/171** | 4,000 /-+ VAT | ரூபா 40,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C7, C8 அல்லது C9 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 4.08 மில்லியன் | பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027<br>பேராதனை, மத்திய தெற்கு அலுவலகத்தில் 2023-09-06ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.<br>**(T:P- 0812388086)** | 13/09/2023 பி.ப. 2.00 மணி |
| 02 | கலகெதர நீர் வழங்கல் திட்டம் - கலகெதர உள்ளீர்ப்புக்கு கேபியன் சுவரை நிர்மாணித்தல்<br>ஒப்பந்த இல : **RSC-C/CN/RH/CIVIL/GABION WALLGALAGEDARA/ 2023/151** | 12,500 /-+ VAT | ரூபா 227,960/- | கட்டிட நிர்மாணம் மற்றும் பெருந்தெருக்கள் நிர்மாணத் துறையில் C5, C6 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 15.19 மில்லியன் | பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027<br>கட்டுகஸ்தோட்டை, மத்திய வடக்கு அலுவலகத்தில் 2023-09-06ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.<br>**(T:P- 0812492311)** | 13/09/2023 பி.ப. 2.00 மணி |
| 03 | கேகாலை DSD - மீள்குடியேற்ற நீர் வழங்கல் திட்டத்தில் தன்தெனிய வத்த மீள்குடியேற்ற காணிக்கு உயர்த்தப்பட்ட பெரோ சீமெந்து உயர்த்தப்பட்ட தாங்கியை நிர்மாணித்தல்<br>ஒப்பந்த இல : **RSC(SAB)/AGM(KEG)/ RES/DAN/ CIVIL/2023/84** | 6,000 /-+ VAT ** | ரூபா 95,000/- | கட்டிட நிர்மாணம் மற்றும் நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C6, C7 அல்லது C8 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 9.5 மில்லியன் | பிஒநி (சப்ரகமுவ), தேநீவச, புதிய நகரம், இரத்தினபுரி.<br>Tele: 045-2228274-6<br>Fax : 045-2228273 | 13/09/2023 பி.ப. 2.00 மணி |
| | **வழங்கல் கேள்விகள்** | | | | | | |
| 04 | 1,000 தொன் பொலி அலுமினியம் குளோரைட்டை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்<br>ஒப்பந்த இல: **SUP&MM/CHEM/PAC-07/2022/17** | 35,000 /-+ VAT ** | ரூபா 2,000,000/- | 1,000 மெ.தொன் பொலி அலுமினியம் குளோரைட் வழங்குதல் மற்றும் விநியோகிப்பதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் மற்றும் ஆவணத்தின் பிரகாரம் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு. | | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 20/09/2023 மு.ப. 10.00 மணி |
| 05 | தெஹிவளை முகாமையாளர் அலுவலகத்திற்கு 25 எண்ணிக்கையான கையடக்கத் தொலைபேசிகளை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்<br>ஒப்பந்த இல: **W-S/P&C/S/EQU (09)/DEHI/O&M/2023/67** | 2,000 /-+ VAT | ரூபா 15,000/- | 5 வருட அனுபவம் சகிதம் கையடக்கத் தொலைபேசிகளை வழங்குதல் மற்றும் விநியோகிப்பதற்கான அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் | 1.375 மில்லியன் | பி.ஒ.நி. (மேற்கு-தெற்கு) அலுவலகம், தேநீவச, இல. 07, அங்குலான ஸ்டேஷன் வீதி, மொரட்டுவ.<br>Tel: 011-2224888<br>Fax : 011-2637945/ 011-2637946/0112637947 | 14/09/2023 மு.ப. 10.00 மணி |
| | 2023-08-09ஆம் திகதிய விளம்பரம் தொடர்பானது. 100,000 எண்ணிக்கையான 15mm(1/2’’) Magnetic Type Brass Lockable Ball Valves வழங்குதல் மற்றும் விநியோகித்தல்<br>ஒப்பந்த இல: **DGM/M&E/Magnetic Type Brass Lockable Ball Valves/15/2022/05 -** இந்தக் கேள்வியின் முடிவுறுத்தல் திகதி 2023-09-15ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் கவனத்திற் கொள்ளவும். | | | | | | |
| | **M & E கேள்விகள்** | | | | | | |
| 06 | ஹொரண பொறுப்பதிகாரி அலுவலகக் கட்டிடத்தில் 15kW (AC) Net Accounting Solar Panel முறைமை மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல், நிறுவுதல், பரீட்சித்தல் மற்றும் செயற்படவைத்தல்<br>ஒப்பந்த இல:**W-S/P&C/S/EQU(08)/P-H/RH/2023/63** | 4,000 /-+ VAT | ரூபா 46,500/- | ஆவணத்தின் பிரகாரம் இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபையில் (SLSEA) பதிவு செய்யப்பட்ட of Solar Panel & Inverter வழங்குவதற்கான வழங்குநர்கள் மற்றும் ஆவணத்தின் பிரகாரம் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு. | 4.25 மில்லியன் | பி.ஒ.நி. (மேற்கு-தெற்கு) அலுவலகம், தேநீவச, இல. 07, அங்குலான ஸ்டேஷன் வீதி, மொரட்டுவ.<br>Tel: 011-2224888<br>Fax : 011-2637945/ 011-2637946/0112637947 | 14/09/2023 மு.ப. 10.00 மணி |
| 07 | பியகம நீர் சுத்திகரிப்பு பொறித்தொகுதியில் Modulating Electrical Actuator வழங்குதல் மற்றும் விநியோகித்தல்.<br>ஒப்பந்த இல: **RPC/WP/G/BIY/M&E/O&M/2023/03** | 6,000 /-+ VAT ** | ரூபா 52,680/- | Actuator வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் மற்றும் ஆவணத்தின் பிரகாரம் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு. | 5.27 மில்லியன் | பிரதிப் பொது முகாமையாளர், (மேற்கு – உற்பத்தி), தேநீவச, உடுமுல்ல வீதி, முல்லேரியா புதிய நகரம்.<br>Tele:0112418532 Fax:0112549199 | 20/09/2023 பி.ப. 2.00 மணி |
| | **சேவைக் கேள்விகள்** | | | | | | |
| 08 | தேநீவவ சபைக்கு தேர்ச்சியற்ற தொழிலாளர் சேவைகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல: **RSC(W/N)/SS/LS/SUP (HO-O&M)/2023/58** | 2,000 /-+ VAT | ரூபா 27,500/- | தேர்ச்சிபெற்ற மற்றும் தேர்ச்சிபெற்ற தொழிலாளர் சேவைகளை (கேள்விக்கு இயைபான) வழங்குவதில் குறைந்தபட்சம் 02 வருடங்கள் அனுபவம் வாய்ந்த இயைபுடைய பிரதேசங்களிலுள்ள பிரதேச செயலகங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள சமூக அடிப்படையிலான அமைப்புகள் (COB) அல்லது வியாபாரப் பதிவின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனம் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | 1.83 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (W/N) அலுவலகம், இல. 433/4A, கணேமுல்ல வீதி, கடவத்தை.<br>Tele:0112922129 Fax:0112922146 | 13/09/2023 மு.ப. 10.00 மணி |
| | **வாகனங்களை வாடகைக்கமர்த்துதல்** | | | | | | |
| 09 | மாத்தளை பிரதேசத்திற்கு (பொறுப்பதிகாரி - பலாபத்வெல) முச்சக்கர வண்டியொன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **RSC-C/M&E/HIRING/O&M/CN/ 2022/219 R2** | 2,000 /-+ VAT | ரூபா 2,000/- | இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் அல்லது வாகன உரிமையாளர்கள் | | பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027 | 13/09/2023 பி.ப. 2.00 மணி |
| 10 | முகாமையாளர் (மத்திய தெற்கு) பிரதேசத்திற்கு 02 எண்ணிக்கையான முச்சக்கர வண்டிகளை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **RSC-C/M&E/HIRING/O&M/CS/2022/211R** | 4,000 /-+ VAT | ஒரு வாகனத்திற்கு ரூபா 2,000/ | இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் அல்லது வாகன உரிமையாளர்கள் | | பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027 | 13/09/2023 பி.ப. 2.00 மணி |
| 11 | கோட்டே முகாமையாளர் பிராந்தியத்தின் கொலன்னாவ பொறுப்பதிகாரி அலுவகத்திற்கு க்றூ கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **WC/M&E/2023/38** | 6,000 /-+ VAT ** | ரூபா 15,000/- | பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழுடன்<br>இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் அல்லது வாகன உரிமையாளர்கள் | | பிஒநி (மேற்கு - மத்திய) தேநீவச, இல. 175A, கலுதொட்ட கட்டிடம், நாவல வீதி, நுகேகொட.<br>Tele:/Fax: 011-2856421/ 0112856420-2 | 13/09/2023 மு.ப. 10.00 மணி |
| 12 | மஹரகம பிராந்திய முகாமையாளரின் பெலன்வத்த பொறுப்பதிகாரிக்கு 01 க்றூ கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துதல<br>ஒப்பந்த இல: **WC/M&E/2022/57R** | 6,000 /-+ VAT ** | ரூபா 15,000/- | பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழுடன்<br>இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் அல்லது வாகன உரிமையாளர்கள் | | பிஒநி (மேற்கு - மத்திய) தேநீவச, இல. 175A, கலுதொட்ட கட்டிடம், நாவல வீதி, நுகேகொட.<br>Tele:/Fax: 011-2856421/ 0112856420-2 | 13/09/2023 மு.ப. 10.00 மணி |
| 13 | கொழும்பு வடக்கு முகாமையாளர் அலுவலகத்திற்கு க்றூ கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துதல<br>ஒப்பந்த இல: **WC/M&E/2023/25** | 6,000 /-+ VAT ** | ரூபா 15,000/- | பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழுடன்<br>இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் அல்லது வாகன உரிமையாளர்கள் | | பிஒநி (மேற்கு - மத்திய) தேநீவச, இல. 175A, கலுதொட்ட கட்டிடம், நாவல வீதி, நுகேகொட.<br>Tele:/Fax: 011-2856421/ 0112856420-2 | 13/09/2023 மு.ப. 10.00 மணி |
| 14 | பொறுப்பதிகாரி (கடுவளை) அலுவலகத்திற்கு க்றூ கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துதல<br>ஒப்பந்த இல: **WC/M&E/2023/40** | 6,000 /-+ VAT ** | ரூபா 15,000/- | பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழுடன்<br>இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் அல்லது வாகன உரிமையாளர்கள் | | பிஒநி (மேற்கு - மத்திய) தேநீவச, இல. 175A, கலுதொட்ட கட்டிடம், நாவல வீதி, நுகேகொட.<br>Tele:/Fax: 011-2856421/ 0112856420-2 | 13/09/2023 மு.ப. 10.00 மணி |
| 15 | கொலன்னாவ பொறுப்பதிகாரி அலுவலகத்திற்கு க்றூ கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துதல<br>ஒப்பந்த இல: **WC/M&E/2023/11R** | 6,000 /-+ VAT ** | ரூபா 15,000/- | பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழுடன்<br>இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் அல்லது வாகன உரிமையாளர்கள் | | பிஒநி (மேற்கு - மத்திய) தேநீவச, இல. 175A, கலுதொட்ட கட்டிடம், நாவல வீதி, நுகேகொட.<br>Tele:/Fax: 011-2856421/ 0112856420-2 | 13/09/2023 மு.ப. 10.00 மணி |
| 16 | அஹங்கம நீர் வழங்கல் திட்டத்திற்கு க்றூ கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துதல<br>ஒப்பந்த இல: **RSC(S)/P&C/HIRING/CREW CAB/AHANGAMA/ O&M/2023-155**. | 4,000 /-+ VAT | ரூபா 15,000/- | இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் அல்லது வாகன உரிமையாளர்கள் | | பிஒநி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை.<br>Tele: 0412222105<br>Fax 0412221329 | 13/09/2023 பி.ப. 2.00 மணி |
| 17 | மாத்தறையிலுள்ள கிராமிய நீர் வழங்கல் திட்டத்திற்கு வேன் ஒன்றை வாடகைக்கமர்த்துதல<br>ஒப்பந்த இல:**RSC(S)/P&C/HIRING/VAN/RWS SECTION/MATARA /O&M/2023-110R** | 4,000 /-+ VAT | ரூபா 15,000/- | இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் அல்லது வாகன உரிமையாளர்கள் | | பிஒநி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை.<br>Tele: 0412222105<br>Fax 0412221329 | 13/09/2023 பி.ப. 2.00 மணி |
| 18 | அக்மீமன நீர் வழங்கல் திட்டத்திற்கு முச்சக்கர வண்டியொன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **RSC(S)/P&C/ HIRING/THREEWHEELER/ AKMEEMANA/O&M/2022-185R** | 2,000 /-+ VAT | ரூபா 2,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிஒநி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை.<br>Tele: 0412222105<br>Fax 0412221329 | 13/09/2023 பி.ப. 2.00 மணி |
| 19 | பலப்பிட்டிய நீர் வழங்கல் திட்டத்தின் பெந்தோட்ட பிரதேசத்திற்கான பராமரிப்பு வேலைகளுக்காக முச்சக்கர வண்டியொன்றை வாடகைக்கமர்த்துதல<br>ஒப்பந்த இல: **RSC(S)/P&C/ HIRING/BENTOTA/ THREE WHEELER/ O&M/2022-186R** | 2,000 /-+ VAT | ரூபா 2,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிஒநி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை.<br>Tele: 0412222105<br>Fax 0412221329 | 13/09/2023 பி.ப. 2.00 மணி |
| 20 | பலப்பிட்டிய நீர் வழங்கல் திட்டத்திற்கு முச்சக்கர வண்டியொன்றை வாடகைக்கமர்த்துதல<br>ஒப்பந்த இல:**RSC(S)/P&C/BALAPITIYA/HIRING/ THREEWHEELER /O&M/2022-184R** | 2,000 /-+ VAT | ரூபா 2,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிஒநி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை.<br>Tele: 0412222105<br>Fax 0412221329 | 13/09/2023 பி.ப. 2.00 மணி |

தயவு செய்து PCA 3 படிவத்தைப் பெற்றுக்கொள்ள இணையதளத்தில் நிகழ்நிலை (online) ஊடாக கம்பனி பதிவாளருடன் பதிவு செய்து கொள்ளவும். (“**” எனக் குறியீடு இடப்பட்ட கேள்விகளுக்கு மட்டும்) பதிவு செய்து கொள்வதற்கு gmail பயன்படுத்த வேண்டுமென மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

முடிவுத் திகதிக்கு முதல் நாள் வரை சாதாரண வேலை நேரங்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் மற்றும் வியாபாரக் கடிதத் தலைப்பிலான வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும்.

சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படும் இடத்திலேயே கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

சமுகம்தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் கேள்விகள் திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.

**தலைவர்,**
**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை.**

# ஹஜ் கோட்டாவில் அரசியல் தலையீடுகள் எதுவும் இல்லை

## போலியான செய்தியால் பிரமுகர்களுக்கு அபகீர்த்தி



ஹஜ் கோட்டா பங்கீட்டில் அரசியல் தலையீடென வெளியாகியுள்ள செய்தி, உண்மைக்குப் புறம்பானதென்றும் , உத்தியோகபூர்வ ஹஜ் தூதுக்குழுவில் சென்ற அரச பிரமுகர்களுக்கு இச்செய்தி, அபகீர்த்தியை ஏற்படுத்தி உள்ளதாகவும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளரும் மற்றும் ஹஜ் குழுவின் தலைவருமான இப்ராஹிம் அன்ஸார் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: அமைச்சர் ஹாபிஸ் நஸீர், பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் மற்றும் இலங்கை ஹஜ் குழுவின் அப்போதைய தலைவர் அஹ்கம் உவைஸ் ஆகியோர், அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவின் வேண்டுகோளின் பேரில், 2022 ஆம் ஆண்டு இலங்கை உத்தியோகபூர்வ ஹஜ் தூதுக்குழுவில் சென்றிருந்தனர். இக்குழுவுக்கு அமைச்சர் நஸீர் அஹமட் தலைமை தாங்கியிருந்தார்.

நாட்டிலிருந்து செல்லும் உத்தியோகபூர்வ ஹஜ் தூதுக்குழு உறுப்பினர்களுக்கும், அக்குழுவில் செல்லும் அரச பிரமுகர்களின் துணைவியருக்கும் பேஸா எனப்படும் *Free Movement Pass* வழங்கப்படுவது சம்பிரதாயம். இதன்படி, உத்தியோகபூர்வ தூதுக்குழுவில் சென்ற இம்மூன்று பிரமுகர்களுக்கும், அவர்களது துணவியருக்கும் பேஸா விசா வழங்கப்பட்டன.

'பேஸா விசா' என்றால் அது உத்தியோகபூர்வ தூதுக்குழுவில் செல்லும் உறுப்பினர்களுக்கு வழங்கப்படுவதாகும்.

இந்த 'பேஸா விசா' ஹஜ் புனித யாத்திரைக்கான சாதாரண ஹஜ் விசாவிலிருந்து விதிவிலக்களிக்கப்பட்டு மக்கா, மதீனா மற்றும் மினா போன்ற இடங்களுக்கு எதுவித கட்டுப்பாடுமின்றி பயணிக்க சலுகையளிக்கிறது. இதைத் தவிர வேறு எந்த சலுகைகளும் பண வசதிகளும் வழங்கப்படுவதில்லை.

நாட்டிலிருந்து 2022 இல், 968 ஹஜ் யாத்திரிகர்கள் சென்றனர். இதில்,68 'பேஸா விசாக்கள்' சவூதியால் வழங்கப்பட்டன.

இதன்படி, 2022 ஆம் ஆண்டு ஹஜ் தூதுக்குழுவில் சென்ற குறித்த மூன்று அரச பிரமுகர்களுக்கும் அரச நிதியிலிருந்து ஒரு தொகையும் வழங்கப்படவில்லை.மேலும்,ஹஜ் நிதியிலிருந்தும் இவர்களுக்கான செலவுகள் பொறுப்பேற்கப்படவில்லை. இம்மூவரும், விமான பயணச்சீட்டு, தங்குமிட வசதி போன்றவற்றை அவர்களது சொந்தப் பணத்திலேயே செலவழித்தனர் என்பதை தெரிவிப்பதாகவும் அவர் விளக்கியுள்ளார்.

## நகர்வலம்





அரநாயக்க திப்பிட்டிய ரஜ மஹாவிஹாராதிபதி சங்கைக்குரிய கெஹெல்வல சன்சானந்த தேரரின் மறைவையொட்டி, திப்பிட்டிய ரனவிரு பொது மைதானத்தில் நடைபெற்ற இறுதி கிரிகைகளில், இனம் மதம் பாராமல் நல்லிணக்கத்தை உணர்த்தும் வகையில் பல்லினத்தவரும் பங்கேற்றிருந்தனர். வில்பொல ஜும்ஆ மஸ்ஜித் நிர்வாக தலைவர் தேசமானிய பர்ஸான் உமர் உட்பட நிர்வாக அங்கத்தவர்களும் இதில் கலந்து, தேரரின் பிரேதப்பேழையை சுமந்து செல்வதை காணலாம்.

### கொழும்பு தமிழ்ச் சங்கத்தில்

# இனிய நந்தவனம் இலங்கை சிறப்பிதழ் அறிமுக விழா



இனிய நந்தவனம் இலங்கைச் சிறப்பு மலர் அறிமுகம் அண்மையில் (27) கொழும்புத் தமிழ்ச் சங்கம் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது

ஞானம் சஞ்சிகை ஆசிரியர் தி.ஞானசேகரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் முன்னிலை வகித்தார்.

செல்வி சக்திகா சிறிகுமரன் தமிழ் வாழ்த்துப் பாட, திருமதி பவானி சச்சிதானந்தன் வரவேற்புரை நிகழ்த்தினார் . உடுவை எஸ்.தில்லை நடராஜன், கலாநிதி சர்மா ஆகியோர் வாழ்த்துரை வழங்கியதுடன், சாகித்ய ரத்னா மு.சிவலிங்கம் நூல் ஆய்வுரை நிகழ்த்தினார்.மேலும், தினகரன் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர், விரகேசரி பிரதம ஆசிரியர் எஸ் ஸ்ரீகஜன் ஆகியோர் சிறப்புரையாற்றியதுடன், இனிய நந்தவனம் ஆசிரியர் நந்தவனம் சந்திரசேகரன் ஏற்புரையாற்றி நன்றி தெரிவித்தார். கவிதா ராம்குமார் நிகழ்வை தொகுத்து வழங்க, கலாபூஷணம் கே.பொன்னுத்துரை நிகழ்ச்சியை சிறப்பாக ஒருங்கிணைத்தார்.

நிகழ்வில், நூற்றுக்கும் மேற்பட்ட இலக்கிய ஆர்வலர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்

## பரத நாட்டியம் அரங்கேற்றம்



கருப்பொருளுடன் கூடிய புத்தாக்க நடன மார்க்கங்களை தொடர்ந்து வழங்கிவரும் அபிநயஷேத்ரா நடனப்பள்ளியின் புதிய படைப்பாக, அபிநயஷேத்ரா நடனப்பள்ளி மாணவி ரிஷிகேஷா செம்பையாவின் நாயகி,பரதநாட்டியம் அரங்கேறுகிறது.

"நாயகி" "கலாசூரி"திவ்யாசுஜேனின் உருவாக்கத்தில் நாயகியர் பலரை சித்தரிக்கும் விதமாக அமைந்துள்ள இவைகளுக்கு மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் கொள்ளுப்பேரன் டாக்டர்ராஜ்குமார் பாரதி இசையமைப்பு வழங்குவதுடன், நிகழ்வின் பிரதம விருந்தினராகவும் வருகை தரவுள்ளார். அத்தோடு பெண்களின் கலை ,கல்வி, வாழ்வாதாரத்திற்கு பெரும் துணை வழங்கிவரும் சமூக சேவையாளர், மனித நேயம் நம்பிக்கை நிதியம் மற்றும் இலங்கை நுண்கலைக் கல்லூரி அமைப்பாளர் திருமதி அபிராமி கைலாசபிள்ளை முதன்மை விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

"பொன்னியின் செல்வன்புகழ்" திருமதி கீர்த்தனா வைத்தியநாதன், திரு ஈஸ்வர் ராமகிருஷ்ணன் , முனைவர் குரு பரத்வாஜ் ஆகியோரின் இசைப் பங்களிப்பில் , திரு கிருஷ்ணன் வெங்கடேஷின் ஒளி அமைப்பில் நாயகி தயாரிப்பு அரங்கேறவுள்ளது.

இந்த பரதநாட்டிய அரங்கேற்ற நிகழ்வு 09.09.2023 மாலை 5.30 மணிக்கு பிஷொப்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# மர்ஹூம் பாயிஸூக்கு துஆ பிரார்த்தனை

**பாணந்துறைமத்திய குறூப் நிருபர்**



மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் மர்ஹூம் ஏ.ஜே,எம். பாயிஸின் நினைவாக துஆப் பிரார்த்தனையும் நினைவேந்தல் நிகழ்வும் இன்று (30) புதன்கிழமை கொழும்பில் இடம் பெறவுள்ளது. கொழும்பு மட்டக்குளி சேர் ராஸிக் பரீத் முஸ்லிம் மகளிர் கல்லூரி "ஏ.ஜே.முஹம்மத் பாயிஸ் கேட்போர்கூடத்தில்" அதிபர் பிரீதாகான் தலைமையில் இந்த நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. கனடாவிலிருந்து கடந்த வருடம் குறுகியகால விஜயம் மேற்கொண்டு நாடு திரும்பிய கல்லூரியின் பழைய மாணவி மர்சூனா தாஹிர், கல்லூரி அதிபரின் வேண்டுகோளின் பேரில் கேட்போர்கூட மண்டப மேடைக்கு கார்பர்ட் அலங்காரம் செய்து கொடுத்துள்ளளார். இது பற்றியும்,இந்நிகழ்வில் பேசப்படவுள்ளது .

கல்லூரிக்கு சிறந்த சேவைகளையாற்றிய, மறைந்த பாயிஸின் பேரிலான ஞாபகார்த்த நிகழ்வுகளை, கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் பழைய மாணவர் சங்கம் உள்ளிட்டோர் ஏற்பாடு செய்துள்ளனர்.

இதேவேளை,கொலன்னாவ வெல்லம்பிட்டிய சாராஸ் கார்டன் அஹதியா பாடசாலையில் மௌலவி சனீர் மற்றும் அதிபர், ஆசிரியர்கள் ஏற்பாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மர்ஹூம் பாயிஸ் நினைவாக விஷேட துஆப் பிரார்த்தனை நிகழ்வு இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

# சீனன்கோட்டை நளீம் ஹாஜியார் அஹதிய்யா பாடசாலை பரிசளிப்பு விழா

**பேருவளை தினகரன் நிருபர்**



பேருவளை சீனன் கோட்டை நளீம் ஹாஜியார் அஹதிய்யா பாடசாலையின் 2021 மற்றும் 2022 ஆண்டுகளுக்கான வருடாந்த பரிசளிப்பு விழா, கல்லூரி பாக்கிர் மாக்கார் மண்டபத்தில் (27) வெகு விமர்சையாக நடைபெற்றது.

சீனன் கோட்டை நளீம் ஹாஜியார் அஹதிய்யா பாடசாலை அதிபர் பௌஸிய்யா நிஸாமுத்தீன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், பிரதம அதிதியாக மகளிர் மருத்துவத்துறையின் மூத்த அதிகாரியும், குருநாகல் போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று மருத்துவருமான வைத்தியர் ஷாபி ஷிஹாப்தீன் கலந்து கொண்டார்.

இலங்கை அஹதிய்யா பாடசாலைகளின் மத்திய கூட்டமைப்பின் பொருளாளர், அல்ஹாஜ் எம்.எச்.எம் உவைம் ஜே பீ,இலங்கை அஹதியா பாடசாலைகளின் மத்திய கூட்டமைப்பின் பிரதி பொருளாளர் ஹிஷாம் ஸுஹைல் , நளீம் ஹாஜியார் கல்லூரி அதிபர் பஹீமா பாயிஸ்,பிக்ராவளி கட்டட நிர்மாண நிறவனத்தின் தலைவர் அஸ்ஜத் ரஹ்மான், அதிகாரமளிக்கும் நிலையத்தின் இணை நிறுவுநர் ஸுரையா ஹம்ஸா, ஆகியோர் விஷேட அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர்.

# மத்ரஸாவின் வருட பூர்த்தி விழா

பாணந்துறை, எழுவிலையில் அமைந்துள்ள ஹிப்ழ் மத்ரஸாவின் ஒரு வருட பூர்த்தி விழாவை முன்னிட்டு மத்ரஸா சமூகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள துஆ பிரார்த்தனை மஜ்லிஸ் இன்று 30ஆம் திகதி புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு எழுவிலை அலவியா முஸ்லிம் மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் வெகு விமர்சையாக நடைபெறவுள்ளதாக மத்ரஸா நிர்வாக சபைத் தலைவர் முஹம்மத் நியாஸ் முஹம்மத் ரஜா தெரிவித்தார். இந்த முபாரக்கான மஜ்லிஸில் உலமாக்கள், முக்கிய பிரமுகர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளதால் அனைத்து ஊர் மக்கள் உட்பட பொதுமக்களும் கலந்து சிறப்பிக்குமாறு ஏற்பாட்டாளர் கேட்டுள்ளனர்.


தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

**மாகாணங்களுக்கு இடையிலான தனியார் பேருந்துகளில் ஆசனங்களை முன் பதிவு செய்வதற்கு முகவர்களை நியமித்தல்**

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் கீழ் இயங்கும் மாகாணங்களுக்கு இடையிலான தனியார் பேருந்துகளில் ஆசனங்களை முன் பதிவு செய்வதற்கு முகவர்களை நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எமது உத்தியோகப்பூர்வ இணையத்தளம் www.ntc.gov.lk//cooperate/media and news/tenders என்பன மேற்குறித்த விடயத்துக்கான விண்ணப்பம் மற்றும் ஆசன முன் பதிவுகளுக்கான விண்ணப்பங்கள் தொடர்பான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை உள்ளடக்கியுள்ளது. ஆர்வமுள்ளவர்கள், பூரணப்படுத்திய விண்ணப்பங்களை கடித உறையிலிட்டு அக்கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"ஆசன முன் பதிவுகளுக்கான முகவர்களை நியமித்தல்"** எனக் குறிப்பிட்டு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, 241 பார்க் வீதி, கொழும்பு 05 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு பிரதி பணிப்பாளர் (Quality Assurance and External Relations) தேசிய போக்குவரத்து ஆணைக்குழு muditha@ntc.gov.lk அவர்களை தொடர்பு கொள்ளவும்.

தலைவர்
தேசிய போக்குவரத்து ஆணைக்குழு
இல 241, பார்க் வீதி, கொழும்பு 05.



**விலைமனுக்களுக்கான அழைத்தல்**

**இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்**

**மிஹிந்தலையிலுள்ள இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்தின் வாகன நிறுத்துமிடம் (II ஆம் கட்டம்) மற்றும் விரிவுரை அறைகள் கட்டிடம் (இரண்டாம் மாடியில் மீதி வேலை),**

**(Contract No.: RJT/CW/2023/03)**

மேலேயுள்ள வேலைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

1. 2023.08.29 ஆம் திகதியிலிருந்து 2023.09.19 ஆம் திகதி வரையும் பெறக்கூடிய படிவங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
2. தகுதியுள்ள விலைமனுதாரர்கள் பின்வரும் தகைமை தகவுத்திறனுக்கு அமைந்தொழுகல் வேண்டும்.
   - சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் பின்வரும் தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்துள்ளவராகவுமிருத்தல் வேண்டும்.
     **CIDA** தரம் - சி-5, சி-6 அல்லது சி-7. விஷேடத்துவம்: கட்டிட நிர்மாணம்.
     **CIDA** பதிவு செய்தலானது விலைமனுக்களை திறக்கும் வேளையிலிருந்து விலைமனுவின் செல்லுபடியாகும் காலம் வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
   - கடந்த ஐந்து வருடங்களில் நிறைவேற்றப்பட்ட நிர்மாண வேலையின் வருடாந்த சராசரிப் பெறுமதியானது ஆகக் குறைந்தது 20 மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும்.
   - விலைமனுதாரரானவர் பிரதான ஒப்பந்தக்காரராக 15.0 மில்லியன் ரூபாவிற்கு குறையான தொகையில் நிகரான தன்மை மற்றும் சிக்கல்தன்மையில் ஆகக் குறைந்தது ஒரு செயற்றிட்டத்தையாவது பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
3. நீங்கள் மேலதிக தகவலை 2023.08.29 ஆம் திகதியிலிருந்து 2023.09.19 ஆம் திகதியன்று வரையும் சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மிஹிந்தலை, இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக வேலைகளுக்கான பொறியியலாளரிடமிருந்து (025-2266787) பெற்றுக் கொள்ளலாம்.
   மேலும், மிஹிந்தலை, இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக பிரதான வேலைகளுக்கான பிரதி பதிவாளரின் அலுவலகத்தில் 2023.08.29 ஆம் திகதியிலிருந்து 2023.09.19 ஆம் திகதியன்று வரையும் சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனுதாரர்கள் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்து மீளளிக்கப்படாத கட்டணமாக 5000 ரூபாவைச் செலுத்திய பின்னர், மிஹிந்தலை, இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக பிரதான வேலைகளுக்கான பிரதி பதிவாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களை ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கையேற்கப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
4. விலைமனுக்கள் 2023.12.06 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
5. அனைத்து விலைமனுக்களும் 180,000 ரூபா (ஒரு இலட்சத்து எண்பதினாயிரம் ரூபா மாத்திரம்) பெறுமதியானதும் இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு பெற்ற புகழ்வாய்ந்த வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெறப்பட்ட அல்லது 90,000 ரூபா ரொக்கப் பணத்திலமைந்த விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது 2024.01.03 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
6. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம், மிஹிந்தலை என முகவரியிடப்பட்ட பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது மிஹிந்தலையிலுள்ள இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக பிரதான நிருவாக கட்டிடத்தின் 2 ஆம் மாடியின் பதிவாளரின் அலுவலகத்தில் வழங்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படலாம்.
7. நிர்மாணக் காலப்பகுதியானது 180 நாட்காட்டி நாட்களாகும்.
8. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியானது 2023.09.20 ஆம் திகதியன்று பி.ப. 2 மணியாகுமென்பதுடன் அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும்.
9. 2023.09.12 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு மிஹிந்தலையிலுள்ள இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக பிரதான நிர்வாக கட்டிடத்தின் 2 ஆம் மாடியின் பதிவாளரின் அலுவலகத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.
10. விலைமனுக்களை திறக்கும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம், மிஹிந்தலை.**
திகதி: 28.08.2023.



**நிதி, பொருளாதார நலைப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு**

**இலங்கைச் சுங்கம்**

**சுங்கத் தலைமைக் கட்டிடத்தில் தீ பாதுகாப்பு அமைப்பினை (Fire Detection System) சேவை மற்றும் பராமரிப்பு விடயங்களை நிறைவேற்றுவதற்காக பொருத்தமான நிறுவனமொன்றைத் தேர்ந்தெடுப்பதற்கான பெறுகை**

**தேசிய போட்டி கேள்வி முறைமை (NCB)**

சுங்கப் பணிப்பாளர் நாயகம் சார்பாக திணைக்கள (சிறிய அளவான) பெறுகைக் குழுவின் தலைவரால் சுங்கத் தலைமை கட்டிடத்தில் தீ பாதுகாப்பு அமைப்பின் (Fire Detection System) சேவை மற்றும் பராமரிப்பு விடயங்களை நிறைவேற்றுவதற்காக தகைமையான நிறுவனமொன்றைத் தேர்ந்தெடுப்பதற்காக தகைமையுள்ள வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| ஒப்பந்த இலக்கம் | பெறுகையின் பெயர் | கேள்விப் பிணைப் பெறுமதி | கேள்விகளை முடிவுறுத்தல் | |
|---|---|---|---|---|
| | | | திகதி | நேரம் |
| LOG/S/6/36/Fire/2022 | சுங்க தலைமையக கட்டிடத்தின் தீ பாதுகாப்பு அமைப்பின் (Fire Detection System) சேவை மற்றும் பராமரிப்பு விடயங்களை நிறைவேற்றுதல் | ரூ. 200,000.00 | 2023.09.19 | பி.ப. 2.00 |

1. கேள்வி கோரல் தேசிய போட்டி கேள்வி கோரலின் கீழ் நடத்தப்படும்
2. ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு மேலதிக தகவல்களை சுங்கப் பணிப்பாளர் (சேவை மற்றும் வழங்கல்கள்) இடமிருந்து பெற்றுக் கொள்ள முடிவதுடன் 2023.08.31 முதல் 2023.09.18 வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கீழ்க்காணும் முகவரியில் கேள்வி ஆவணங்களைப் பரீட்சிக்கலாம்.
3. ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்க 2023.09.18 அலலது அதற்கு முன் வேலை நாட்களில் மு.ப. 9.00 பி.ப. 3.00 இற்குமிடையில் ரூ. 1000.00 மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி இலங்கை சுங்கத்தின் 6ஆம் மாடியில் அமைந்துள்ள சேவை மற்றம் வழங்கல் பிரிவில் இருந்து எழுத்துமூல விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியொன்றை கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாக மட்டுமே மேற்கொள்ளலாம்.
4. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகள் 2023.09.19 பி.ப. 2.00 இற்கு அல்லது அதற்கு முன்பு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது சேவை வழங்கல் பிரிவில் அதற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். 2023.09.19 பி.ப. 2.00 இற்கு கீழே தரப்பட்டுள்ள முகவரியில் கேள்விகள் திறக்கப்படுவதுடன் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கின்ற கேள்விதாரர்களுக்கு அல்லது அவர்களது பிரதிநிதியொருவருக்கு அதற்காக சமுகமளிக்கலாம். சகல கேள்விகளும் ரூ. 200,000.00 கேள்விப் பிணையுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

   **சுங்கப் பணிப்பாளர் (சேவை மற்றும் வழங்கல்கள்)**
   **6ஆவது மாடி, இலங்கைச்சுங்கம்,**
   **இல. 40, பிரதான வீதி, கொழும்பு -11**
5. கேள்வி வழங்குதல் பற்றிய சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**திணைக்கள (சிறிய அளவான) பெறுகைக் குழு,**
**இலங்கைச் சுங்கம்,**
**இல. 40, பிரதான வீதி, கொழும்பு -11.**
**தொ. பே. இலக்கம்: 011-2221680/ பெக்ஸ்: 011-2436096**

## ஆசிய கிண்ணம் இன்று ஆரம்பம்

# உபாதையால் பந்துவீச்சு வரிசையை இழந்திருக்கும் இலங்கைக்கு சவால்



ஒக்டோபர் மாதம் இந்தியாவில் ஆரம்பமாகவுள்ள உலகக் கிண்ணத்திற்கு முன்னதாக ஆசியாவின் பலம்மிக்க நாடுகளான இந்தியா, பாகிஸ்தான் மற்றும் இலங்கை அணிகள் தமது பலத்தை நிரூபிக்க முயற்சிக்கும் ஆசிய கிண்ணப் போட்டி இன்று ஆரம்பமாகவுள்ளது.

பாகிஸ்தான் மற்றும் நேபாள அணிகளுக்கு இடையே முல்தானின் இன்று நடைபெறும் போட்டியுடன் ஆரம்பமாகும் ஆசிய கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டி கொழும்பில் செப்டெம்பர் 17 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

உலகக் கிண்ணத்தை ஒட்டி போட்டிகள் நடைபெறுவதால் 50 ஓவர் வடிவத்திலேயே இம்முறை ஆசிய கிண்ண தொடர் நடைபெறுகிறது. எனினும் கடந்த ஆண்டு நடந்த டி20 வடிவிலான ஆசிய கிண்ணத்தை இலங்கை கைப்பற்றிய நிலையில் நடப்புச் சம்பியனாகவே இந்தத் தொடரில் இலங்கை களமிறங்குகிறது.

எனினும் இலங்கை அணியில் பல வீரர்களும் காயத்துக்கு உள்ளான நிலையில் பெரும் பின்னடைவுடனேயே இந்தத் தொடரில் களமிறங்குகிறது. குறிப்பாக இலங்கையின் பந்துவீச்சு வரிசை முழுமையாக உபாதைக்கு முகம்கொடுத்துள்ளது.

வேகப்பந்து வீச்சாளர்களான துஷ்மன்த சமீர, லஹிரு குமார, டில்ஷான் மதுஷங்கவுடன் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் வனிந்து ஹசரங்கவும் உபாதையால் தொடரில் இருந்து வெளியேறியுள்ளனர். இதனால் இலங்கை அணியின் பந்துவீச்சு வரிசை பெரும் நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளது.

இவர்களுக்கு பதிலான கசுன் ராஜித்த, பினுர பெர்னாண்டோ, பிரமோத் மதுஷான் மற்றும் துஷான் ஹேமன்த ஆகியோர் இணைக்கப்பட்டுள்ளனர்.

எனினும் இலங்கை அணியின் துடுப்பாட்ட வரிசை பலத்துடன் இருப்பதோடு பெரும்பாலான போட்டிகள் இலங்கையில் நடைபெறுவதும் இலங்கைக்கு சாதகமான ஒன்றாகும்.

முதல் சுற்றில் பி குழுவில் ஆடும் இலங்கை அணி நாளை (31) தனது முதல் போட்டியில் பங்களாதேஷை எதிர்கொள்ளவுள்ளது. இந்தப் போட்டி கண்டி பல்லேகலவில் நடைபெறவுள்ளது. தொடர்ந்து லாகூரில் செப்டெம்பர் 5 ஆம் திகதி நடைபெறும் இரண்டாவது குழு நிலை போட்டியில் இலங்கை அணி ஆப்கானிஸ்தானை எதிர்கொள்ளவுள்ளது.

குழு நிலையில் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகளே சுப்பர் போர் சுற்றுக்கு முன்னேறும் என்ற நிலையில் இந்த இரண்டு போட்டிகளும் இலங்கை அணிக்கு முக்கியமானதாக உள்ளது.

அதேபோன்று 2019 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இதுவரை ஒருநாள் சர்வதேச போட்டிகளில் சந்தித்திராத இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் ஆசிய கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டிக்கு முன்னேறும் பட்சத்தில் தொடரில் மூன்று தடவைகள் பலப்பரீட்சை நடத்த வாய்ப்பு உள்ளது.

ஏ குழுவில் இந்தியா, பாகிஸ்தானுடன் முதல் முறை ஆசிய கிண்ணத்தில் ஆட தகுதி பெற்றிருக்கும் நேபாள அணியும் இடம்பெற்றுள்ளது. இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான குழு நிலை போட்டி எதிர்வரும் செப்டெம்பர் 2 ஆம் திகதி கண்டி பல்லேகலவில் நடைபெறவுள்ளது.

இந்திய அணி பாகிஸ்தான் செல்ல மறுத்தத்தை அடுத்தே பாகிஸ்தானுடன் இலங்கையிலும் போட்டிகளை நடத்த தீர்மானிக்கப்பட்டது. இதன்படி இந்திய – பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான போட்டிகள் அனைத்தும் இலங்கையிலேயே நடைபெறும்.

ஆப்கானிஸ்தானுக்கு எதிராக இலங்கையில் அண்மையில் நடந்த ஒருநாள் தொடரை பாக். அணி 3–0 என முழுமையாக வென்றதை அடுத்து பாபர் அஸாம் தலைமையிலான அந்த அணி ஐ.சி.சி ஒருநாள் தரவரிசையில் முதல் இடத்திற்கு முன்னேறிய நிலையிலேயே இந்தத் தொடரில் களமிறங்குகிறது.

மறுபுறம் பாகிஸ்தான் அணியின் முக்கிய வீரர்கள் லங்கா பிரீமியர் லீக் தொடரில் பங்கேற்று கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக இலங்கையில் தங்கி ஆடி வருவது மற்றொரு அனுகூலமாக உள்ளது.

அதேபோன்று உலகக் கிண்ணத்தை நடத்தவுள்ள ரோஹித் ஷர்மா தலைமையிலான இந்திய அணி வலுவான நிலையிலேயே இந்தத் தொடரில் களமிறங்குகிறது. எனினும் இந்திய அணியின் விக்கெட்காப்பு துடுப்பாட்ட வீரரான கே.எல் ராகுல் உடல் தகுதி பெற்று வரும் நிலையில் ஆசிய கிண்ணத்தின் முதல் இரு போட்டிகளிலும் பங்கேற்க மாட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் விராட் கொஹ்லி, ஷ்ராயஸ் ஐயர், ஷுப்மன் கில்லுடன் ரோஹித் சர்மா என பலமான துடுப்பாட்ட வரிசையை இந்திய அணி கொண்டுள்ளது.

மறுபுறம் தமீம் இக்பால் தலைமை பதவியில் இருந்து விலகி, காயத்தினால் இந்தத் தொடரிலும் பங்கேற்காத நிலையில் சற்று தளம்பலை சந்தித்த பங்களாதேஷ் அணி ஷகீப் அல் ஹசன் தலைமையில் களமிறங்குகிறது. அந்த அணி எப்போது சவாலான அணியாக இருக்கும்.

அண்மையில் நடந்த பாகிஸ்தானுடனான தொடரில் தோற்றாலும் ஆப்கான் அணி எதிரணிக்கு நெருக்கடி கொடுக்கும் அணியாகவே இருந்து வருகிறது. குறிப்பாக சுழற்பந்துக்கு சாதகமான ஆடுகளங்களில் ரஷீட் கான், முஜிபுர் ரஹ்மான் மற்றும் முஹமது நபி ஆகியோர் கடும் சவாலாக இருப்பார்கள்.

அதேபோன்று பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியின்போது ஆப்கான் துடுப்பாட்ட வீரர் ரஹ்மானுல்லா குர்பாஸ் தனது அணி தோற்றபோதும் 151 ஓட்டங்களை பெற்றிருந்தார்.

குழு நிலையில் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் சுப்பர் போர் சுற்றுக்கு முன்னேறும். அந்த சுற்றில் ஒரு அணி மற்ற அணியுடன் ஒருமுறை மோதும். அதில் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகளே இறுதிப் போட்டிக்கு முன்னேறும்.

தொடரின் அனைத்துப் போட்டிகளும் பகலிரவு ஆட்டங்களாக இலங்கை நேரப்படி பி.ப. 3 மணிக்கே ஆரம்பமாகும்.

# ஸாஹிரா சுப்பர் 16 கால்பந்து போட்டிகள் செப்டெம்பர் 9இல்

ருஸைக் பாரூக்

சாஹிரா கல்லூரியின் பழைய மாணவத் தலைவர்கள் சங்கத்தினால் 17 ஆவது முறையாக நடத்தப்படும் நோலிமிட் சுப்பர் 16 சம்பியன்சிப் கால்பந்தாட்டப் போட்டி எதிர்வரும் செப்டெம்பர் 9ஆம் திகதி குதிரைப்பந்தய சர்வதேச அரங்கில் நடைபெறவுள்ளது.

16 முன்னணி பாடசாலை அணிகள் பங்கேற்கும் இந்தப் போட்டி அணிக்கு 7 பேர் கொண்டதாக ஒரு நாள் முழுவதும் நடத்த ஏற்பாடாகியுள்ளது. இந்த போட்டி தொடர்பில் விளக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு கடந்த திங்கட்கிழமை (28) கொழும்பு, சாஹிரா கல்லூரியில் நடைபெற்றது. இதன்போது பிரதான அனுசரணையாளரான நோலிமிட் மற்றும் ஏனைய அனுசரணையாளர்களின் அனுசரணை காசோலை வழங்கும் நிகழ்வு மற்றும் ஜெர்சி அறிமுகம், கிண்ண அறிமுகம், அணிகளை குழுநிலைப் படுத்தும் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதில் கடந்த ஆண்டு சம்பியனான கொழும்பு, சாஹிரா கல்லூரி முதல் கொண்டு 16 பாடசாலை அணிகள் போட்டியிடவுள்ளன. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, கம்பளை சாஹிரா கல்லூரி அணிகளும் இந்தப் போட்டிகளில் பங்கேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. தவிர, கனிஷ்ட பிரிவுகளிலும் போட்டிகள் நடைபெறவுள்ளன.




போட்டியின் பிரதான அனுசரணையாளரான நோலிமிட் சந்தைப்படுத்தல் முகாமையாளர் பவாஸ் மொஹமட் ஊடகவியலாளர் சந்திப்பில் ஸாஹிரா கல்லூரி அதிபர் டிரிஸ்வி மரிக்கரிடம் அனுசரணையை வழங்குவதையும் சிரேஷ்ட வர்த்தக நிறைவேற்று அதிகாரி ரோஹான் குணரத்ன, சில்லறை விற்பனை முகாமையாளர் ஷப்ராஸ் நியாஸ், பழைய மாணவர் தலைவர்களின் சங்க தலைவர் கலீல் உர் ரகுமான், திட்டத் தலைவர் வசீம் அஷ்ரோப் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

# லயன் போயிஸ் சம்பியன்

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

அனுராதபுரம் அலிகுமுளாகல சன் ஸ்டார் கிண்ண மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் ஹொரவப்பொத்தான முக்கரவெள லயன் போயிஸ் விளையாட்டு கழகம் சம்பியனானது.

அலிகுமுளாகல சன் ஸ்டார் பொது விளையாட்டு மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (27) நடைபெற்ற இறுதிப் போட்டியில் முக்கரவெள விளையாட்டு கழகத்தை லயன் போயிஸ் தோற்கடித்தது. இறுதிப் போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரராக சர்தாத் மற்றும் சிறந்த வீரராக எஸ். ஹமீட் தெரிவாகினர்.



# ரிபில் பீ கிண்ணத்தை வென்றது லோர்ட்ஸ்

அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்

அக்கரைப்பற்று 'ரிபில் பீ' விளையாட்டு கழகத்தின் 17 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் அக்கரைப்பற்று லோர்ட்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியன் கிண்ணத்தை வென்றது.



அக்கரைப்பற்று பதுர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இந்தத் தொடரின் இறுதிப்போட்டி கழகத்தின் தலைவர் முஹம்மட் பெரோஸ் தலைமையில் நேற்று முன்தினம் (28) நடைபெற்றது. இதில் ஒலுவில் இலவன் ஸ்டார் அணியை எதிர்கொண்ட லோர்ட்ஸ் அணி 5 ஓவர்களுக்கு நிர்ணயித்த 31 ஓட்ட வெற்றி இலக்கை விக்கெட் இழப்பின்றி எட்டியது.

# பெண்ணின் மூளைக்குள் உயிருடன் இருந்த புழு

## சத்திரசிச்சை மூலம் நீக்கம்




மருத்துவ வரலாற்றில் முதல் முறையாக அவுஸ்திரேலிய மருத்துவர்கள் பெண் ஒருவரின் மூளையில் உயிருள்ள 3 அங்குல நீளமான புழு ஒன்றைக் கண்டெடுத்துள்ளனர்.

கென்பராவில் கடந்த ஆண்டு இடம்பெற்ற சத்திர சிகிச்சையில் 64 வயதான நோயாளியின் சேதமடைந்த முன் மடல் பகுதியில் இருந்து இந்த புழு எடுக்கப்பட்டுள்ளது.

கடந்தாண்டு, திடீரென ஞாபக மறதி மற்றும் மனச்சோர்வுக்கு இலக்கான அந்தப் பெண்ணை பரிசோதனை செய்த நரம்பியல் மருத்துவர்கள் அவரது மூளையின் வலது முன்மடல் விநோதமாக தோற்றமளிப்பதை கண்டுபிடித்தனர். இதனைத் தொடர்ந்தே மூளை சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சத்திர சிகிச்சைக்குப் பின்னரும், அந்தப் புழு இன்னும் உயிருடன் நெளிந்துகொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. இந்த சிவப்பு ஒட்டுண்ணி இரண்டு வாரங்கள் வரை மூளையில் இருந்திருக்காலம் என்று மருத்துவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அப்புழு மலைப்பாம்பு ஒன்றிடமிருந்து மரக்கறி அல்லது கீரை ஒன்றின் வழியாக வெளியாகியிருக்கக்கூடும் என்றும் அதனை குறித்த பெண் தொட்டு அல்லது சாப்பிட்டிருக்கக்கூடும் என்றும் ஊகிக்கப்படுவதாக ஆய்வில் தெரிவிக்கப்பட்டது.

இந்த புழுக்கள் அவுஸ்திரேலியாவின் சில மாகாணங்களில் மட்டுமே உள்ள ஒருவகை மலைப்பாம்புகளின் வயிற்றுக்குள் மட்டுமே காணப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

தொற்றுநோய், மூளை நிபுணர்கள் அந்தப் பெண்ணை தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

## சர்வதேச செய்திகள்

# இம்ரான்கானை விடுவிக்க நீதிமன்றம் உத்தரவு: குற்றச்சாட்டு இடைநிறுத்தம்

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் மீது அண்மையில் குற்றங்காணப்பட்ட ஊழல் குற்றத்தை அந்நாட்டு உயர் நீதிமன்றம் நேற்று (29) இடைநிறுத்தியதோடு அவரை விடுவிக்கவும் உத்தரவிட்டுள்ளது. இது அவர் சிறையில் இருந்து விடுதலை பெற வழிவகுத்திருப்பதாக அவரது வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தான் கீழ் நீதிமன்றத்தினால் இந்த மாதத்தில் இம்ரான் கானுக்கு மூன்று ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட தீர்ப்பையே இஸ்லாமாபாத் உயர் நீதிமன்றம் இடைநிறுத்தி இருப்பதாக இம்ரான் கானின் பாகிஸ்தான் தஹ்ரீக்கே இன்சாப் கட்சியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இம்ரான் கான் மீது வழங்கப்பட்டிருந்த தீர்ப்பு அவர் எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுவதை தடுப்பதாகவும் இருந்தது.



இம்ரான்கானுக்கு பிணை அளிக்கப்பட்டிருப்பதாக அவரது கட்சி மற்றும் வழங்கறிஞர்கள் தெரிவித்துள்ளனர். எனினும் அவருக்கு எதிரான 200க்கும் அதிகமான வழக்குகள் தொடுக்கப்பட்டிருக்கும் நிலையில் அவர் மீண்டும் கைது செய்யப்பட வாய்ப்பு இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 2022 ஏப்ரலில் பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லா தீர்மானித்தின் மூலம் இம்ரான் கான் பதவி கவிழ்க்கப்பட்டது தொடக்கமே அவர் மீது அடுக்கடுக்காக வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

'வேறு எந்த வழக்கிலும் அவரை கைது செய்வதில் இருந்து நிர்வாகத்தை தடுக்கும் வகையில் உத்தரவு பிறப்பிக்கும்படி நாம் மற்றொரு மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளோம்' என்று அவரது வழங்கறிஞர்களில் ஒருவரான கொஹார் கான் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தார்.

'வேறு ஏதேனும் வழக்கில் அவர் கைது செய்யப்பட்டால் அது அவரது சட்ட உரிமைக்கு எதிரானது' என்றும் அவர் தெரிவித்தார்.

இம்ரான் கான் பிரதமர் பதவியில் இருந்தபோது தமக்கு கிடைத்த பரிசுகளை முறையாக அறிவிக்க தவறியதாகவே அவர் குற்றம் காணப்பட்டார். அது தொடக்கம் அவர் மூன்று வாரங்களாக சிறை அனுபவித்தார்.

இம்ரான் கான் சிறைவைக்கப்பட்ட நிலையில் பாகிஸ்தான் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் வரை காபந்து அரசு ஒன்ற அமைக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் மாதங்களில் பாகிஸ்தானில் பொதுத் தேர்தல் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும் தேர்தலுக்கான திகதி இன்னும் அறிவிக்கப்படவில்லை.

# ஈராக்கில் 300 பேர் கொல்லப்பட்ட தாக்குதலுக்கு மூவருக்கு தூக்கு



ஈராக் தலைநகர் பக்தாதில் 2016 ஆம் ஆண்டு 300 பேர் கொல்லப்பட்ட வாகன குண்டு தாக்குதலுடன் தொடர்புபட்ட மூவர் தூக்கிலிடப்பட்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

புனித ரமழான் மாதத்தின் இரவு நேரத்தில் மக்கள் ஒன்று கூடி இருந்தபோதே இந்த குண்டு வெடிப்பு இடம்பெற்றது. 2003 ஆம் ஆண்டு ஈராக் மீதான அமெரிக்க படையெடுப்புக்குப் பின்னர் இடம்பெற்ற அதிக உயிரிழப்புக் கொண்ட ஒற்றை குண்டு தாக்குதலாக இது இருந்தது.

இந்தத் தாக்குதலுக்கு ஐ.எஸ் குழு பொறுப்பேற்றது. ஐ.எஸ் ஈராக்கில் தனது நிலங்களை இழந்து தோற்கடிக்கப்பட்டபோதும் அங்கு தொடர்ந்தும் இயங்கி வருகிறது. இந்த மரண தண்டனைகள் கடந்த ஞாயிறு அல்லது திங்கட்கிழமையில் நிறைவேற்றப்பட்டதாக ஈராக் பிரதமர் ஷியா அல் சுதானி தெரிவித்துள்ளார். எனினும் தூக்கிலிடப்பட்டவர்கள் விபரம் வெளியிடப்படவில்லை.

எனினும் இந்த தாக்குதலுக்கு மூளையாக செயற்பட்டவர் என்று சந்தேகிக்கப்படும் கஸ்வான் அல் சௌபாயீயும் தூக்கிலிப்பட்டவர்களில் இருப்பதாக அரச தரப்பை மேற்கோள் காட்டி ஏ.எப்.பி செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. சௌபாயீ 2021 ஆம் பிடிபட்டார்.

2016 ஜூலை 16 ஆம் திகதி ஈராக் தலைநகரில் ஷியா முஸ்லிம்கள் அதிகம் வாழும் கர்ராதா பகுதியில் உள்ள கடைத் தொகுதி ஒன்றுக்கு அருகில் வெடிபொருட்களை நிரப்பிய வாகனம் வெடித்தது. இந்த வெடிப்பினால் கட்டடத்தில் ஏற்பட்ட தீயினாலேயே அதிகம் பேர் கொல்லப்பட்டனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஓகஸ்ட் மாதம் 30ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.